Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்–08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆடி -05 | 21-07-2003 | திங்கட்கிழமை | ஓசை 153

கட்டட அலங்காரப் பொருட்கள்
கிறில் கறகள், பூச்சாடிகள், சிறு தூண் கள், நிலத்திற்குப் பதிக்கும் கறகள்.
விற்பனை நிலையம்
இளிர் தையலகம்
கிளிநொச்சி, விசுவமடு, வட்டக் கச்சி, மாங்குளம், மல்லாவி, புதுக் குடியிருப்பு, முல்லைத்தீவு, பளை
விற்பனை ஆரம்பம் - 20.07.2003 முதல்
(2292)

# அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றின் மூலம் இ.நி.கட்டமைப்பை உருவாக்க முடியும்

## ரணில் விக்கிரம சிங்க தெரிவிப்பு



**அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றின் மூலமோ அல்லது சுற்றறிக்கை ஒன்றின் மூலமோ புலிகள் கோருவது போன்ற ஒரு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை நிறைவேற்றலாம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.**

ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பின் இரண்டாம் கட்ட நிகழ்ச்சியை மெதுருகிரியவில் ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.இலங்கையின் சரித்திரத்தில் இவ்வாறான நிர்வாகக் கட்டமைப்புச் சபைகள் இதற்கு முன்னரும் உருவாக்கப்பட்டுள்ளது என்றும் 1972 இல் அமைக்கப்பட்ட மாவட்ட மற்றும்

(08ம் பக்கம் பார்க்க)

## வீதியின் நடுப்பகு[illegible] காவலரண் விஸ்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தியசாலை வீதியையும் கே.கே.எஸ் வீதியையும் சந்திக்கும் சத்திரச் சந்தியில் அமைந்திருக்கும் திருவள்ளுவர் சிலைக்குத் தென்மேற்குப் பகுதியில் உள்ள இராணுவக் காவலரண் வீதியின் நடுப்பகுதி வரையும் விஸ்தரிக்கப்பட்டுள்ளதால் அப்பகுதியில் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் அதிகரித்துள்ளது.நீண்ட காலமாக அமைந்திருக்கும் இக்காவலரணால் கனரக வாகனங்கள் அதிகம் பயணம் செய்யும் இவ்வீதியின் விபத்

(08ம் பக்கம் பார்க்க)

## மட்டு. சத்துருக் கொண்டானில் பொலிசார் தீவிர சோதனை

மட்டக்களப்பு சத்துருக் கொண்டானில் பிரதான வீதியில் நேற்றுப் பொலிசார் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.காலை ஒன்பது மணி தொடக்கம் 4 மணிவரை இச் சோதனை நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.இதன்போது வாகனங்களில் சென்ற பொது மக்கள், துவிச்சக்கர வண்டிகளில் சென்றவர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் நடைபாதையில் சென்றவர்களும்

(08ம் பக்கம் பார்க்க)

## இறையாண்மை குறித்த விளக்கத்தை நவீனப்படுத்தும் தேவை எழுந்துள்ளது

### சர்வதேச நீதிமன்ற முன்னாள் நீதியரசர் பி.வீரமந்திரி

நாடாளுமன்றின் இறையாண்மை தொடர்பான விளக்கத்தை நவீனமயப்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளதாக சர்வதேச நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசரான பி. வீரமந்திரி தெரிவிக்கின்றார்.

உலக சமூகத்திற்கு சுற்றாடல், சுகாதாரம் மற்றும் அணு ஆயுதங்கள் போன்றவற்றினாலும் பல்லின இராணுவ நடவடிக்கைகளினாலும் ஏற்பட்டுள்ள அபாயகரமான நிலைமைகளைக் கருத்திற் கொண்டே இவ்வாறு இதனை நவீனமயப்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளதாக அவர் கூறுகின்றார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் கடந்த வெள்ளியன்று உரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தேசம் மற்றும் இறையாண்மை பற்றிய புதிய எண்ணக்கரு என்ற தலைப்பில் உரையாற்றும் போது சர்வதேச சட்டத்துறை தொடர்ந்து விரிவடைந்து வருவதால் நாடொன்றின் இறையாண்மை தொடர்பான சம்பிரதாயபூர்வ விளக்கங்கள் அர்த்தமற்றதாகி வருவதாகக் கூறினார். ஒரு நாட்டின் நடவடிக்கை இன்னொரு நாட்டில் தங்கியிருக்கிறது: சுகாதாரம்

(08ம் பக்கம் பார்க்க)

## ஓட்டமாவடி முஸ்லிம் ம.வி அதிபர் வீட்டுக்குக் குண்டு வீச்சு

ஓட்டமாவடியில் முஸ்லிம் ஒருவரின் விட்டின் மீது நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதலில் வீடு சேதமடைந்தது.முகமத் குசைன் ஹயாத் முகமத் என்பவரின் வீட்டுக்கே கைக்குண்டு வீசப்பட்டுள்ளது. இவர் தமிழ்-முஸ்லிம் ஒருமைப்பாட்டுக் குழுவின் தலைவராக உள்ள துடன் ஓட்டமாவடி முஸ்லிம் மகாவித்தியாலயத்தின் அதிபருமாவார். இக் குண்டு வீச்சுக்கான காரணம் என்னவெனத் தெரியவில்லை எனப் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

## இடைக்கால நிர்வாகசபை குறித்து முஸ்லிம் பா.உ.கள் கூடி ஆராய்வர்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு இடைக்கால நிர்வாகசபை குறித்த முஸ்லிம் மக்கள் சார்பில் தமது யோசனையை முன்வைப்பதற்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூடி ஆராயவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாளை மறுதினம் நடைபெறவுள்ள இக் கூட்டத்துக்கான ஒழுங்குகளைக் கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சருமான எம்.எச்.முகமட் மேற்கொண்டு வருகின்றார்.

இடைக்கால நிர்வாக சபை குறித்து முஸ்லிம் மக்களின் சார்பில் ஒருமித்த கருத்தை முன்வைக்க வேண்டும் என்ற நோக்குடனேயே இக் கூட்டம் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

## வியட்நாம் குழு கொழும்பு வருகை

(கொழும்பு)

வியட்நாமிற்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை மேம்படுத்தும் நோக்கில் வியட்நாம் அரச பிரதிநிதிகள் குழுவொன்று நேற்று முன்தினம் கொழும்பு வந்துள்ளது. இந்தக் குழுவிற்கு வியட்நாம் வெளிநாட்டு அமைச்சர் தலைமை தாங்குகின்றார்.

(08ம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சிக் கரையோரங்களில் படையினரின் காவலரண்கள் அதிகரிப்பு

தென்மராட்சி கரையோரங்களில் சிறிலங்காப் படையினரால் காவலரண்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. சாவகச்சேரிப் பகுதியிலிருந்து கிளாலி வரையான கடலேரிக் கரையோரத்தில் பனைமரக் குற்றிகள் நாட்டப்பட்டுப் பாதுகாப்பு வேலிகள் படையினரால் அமைக்கப்பட்டு வருகின்றது.இதற்காகச் சாவகச்சேரி தம்புத் தோட்டப் பகுதியில் இருந்து பனை மரங்கள் வெட்டப்பட்டு வாகனங்களில் கொண்டு செல்லப்படுகின்றன. இதேவேளை கச்சாய்த்துறை முகத்திலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தொலைவிலுள்ள சாம்பன் தீவிற்குப் பனைமரக் குற்றிகளால் நடைபாதை ஒன்றும் அமைக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

## அமெரிக்கா-சிறிலங்கா அரசு இராணுவ ஒத்துழைப்பு அதிகரிப்பு

### அமெ.தூதரகப் பேச்சாளர் தெரிவிப்பு

அமெரிக்காவுக்கும் சிறிலங்காவுக்கும் இடையேயான இராணுவ ஒத்துழைப்புஅதிகரித்து வருவதாக கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்தின் ஊடகத்துறை அதிகாரி புறுஸ்.ஏ லொகூஸ் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா அரசாங்கமும் அமெரிக்காவும் இது தொடர்பான நிகழ்ச்சி நிரலின் படி ஒத்துழைப்பு வழங்கிவருவதாகவும் அவர் கூறினார். சிறிலங்காவின் புலனாய்வுத்துறையை வளர்க்க அமெரிக்காவின் சிஐஏ அல்லது ஏனைய அமெரிக்க அதிகாரிகளின் ஒத்துழைப்பு வழங்கப்பட்டு வருகிறதா எனக் கேட்கப்பட்ட போது கருத்து ஏதும் கூறமறுத்துவிட்டார்

## காணாமல் போனோரின் உறவினர்கள் பாராளுமன்றத்தின் முன் உண்ணாவிரதம்

### - நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போனோர் தொடர்பாக காணாமல் போனோர் பெற்றோர் பாதுகாவலர் சங்கம் சிறிலங்காப் பாராளுமன்றத்துக்கு முன்னால் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்தப் போவதாக அறிவித்துள்ளது.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் யாழ். முனியப்பர் ஆலயத்துக்கு முன்பு நடைபெற்ற காணாமல் போனோர் பெற்றோர் பாதுகாவலர் சங்கக் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பாக இச்சங்கச் செயலாளர் சற்குணம் கருத்துத் தெரிவிக்கையில்; அண்மையில், காணாமல் போனோரின் விபரங்களைக் கோரி பிரதமரின் அலுவலகத்தில் பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோனைச் சந்தித்து இச்சங்கத்தின் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். ஆனால் இதுவரையும் எதுவிதமான சாதகமான பதிலும் கிடைக்கவில்லை. அத்துடன் எம்மை கொழும்புக்கு அழைத்துச் சென்ற யாழ். அரச அதிபரிடம் இது விடயமான விளக்கங்களைக் கோரியிருந்தோம். அவர் இது தொடர்பாக தமக்கு எந்தமுடிவும் அறிவிக்கப்படவில்லை என்று தெரிவித்தார். ஏற்கனவே யாழ். செயலகம் முன்பாக மறியல் போராட்டம் நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது. ஆனாலும், இதில்

(08ம் பக்கம் பார்க்க)

## உழவு இயந்திரத்திலிருந்து தவறி வீழ்ந்தவர் படுகாயம்

(அலுவலகச் செய்தியாளர்)

திருவையாறு தபாலகம் முன்பாக உழவு இயந்திரத்திலிருந்து வீழ்ந்த இளைஞன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.சேதமடைந்துள்ள வீதியில் அதிகரித்த வேகத்தில் சென்று கொண்டிருந்த உழவு இயந்திரம் திடீரெனக் குழியில் வீழ்ந்த போது அதன் மட்காட்டிலிருந்து பயணித்தவர் நிலத்தில் வீழ்ந்து படுகாயமடைந்துள்ளார். படுகாயமடைந்த துபேன்(வயது-18) என்ற இளைஞன் கிளிநொச்சி மாவட்ட

(08ம் பக்கம் பார்க்க)

## இரத்தம் கக்கியநிலையில் வயோதிபரின் சடலம் மீட்பு

யாழ். அளவெட்டிப் பகுதியின் வீடொன்றிலிருந்து இரத்தம் கக்கிய நிலையில் வயோதிபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. அளவெட்டியில் இடம்பெயர்ந்து இயங்கிவரும் பாடசாலைக்கு அண்மையில் உள்ள வீடொன்றில் தனிமையில் வாழ்ந்து வந்த பொ.முருகையா வயது 52 என்பவரே நேற்று அந்த வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவரது சடலத்தை யாழ் தெல்லிப்பளைப் பொலிசார் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். இவரது மர்மமரணம் தொடர்பாகத் தெல்லிப்பளை பொலிசார் விசாரணை நடத்துகின்றனர். (33)

## வரி விளம்பரம்

**Amal Dental Works**

இரணைப்பாலை வீதி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு என்ற முகவரியில் இருந்த அமல் பல்கட்டும் நிலையம் பரந்தன் வீதிக்கு மாற்றப்பட்டுள்ளது. இங்கே பல் கட்டுதல், பல் கிளிப் போடுதல் என்பவற்றினை உடன் செய்து கொள்ளலாம். (3458)

## செயற்கைமுறை சினைப்படுத்தல்

2003 ஆனி மாதம் முல்லை மாவட்டத்தில் செயற்கைமுறைச் சினைப்படுத்தல் மூலம் இருபத்தைந்து பசுமாடுகளும், ஆறு மறி ஆடுகளும் கருவூட்டப்பட்டன. இச் செயற்பாடு கால்நடைகளின் நல்லின விருத்திக்கு வலுவூட்டுகின்றன என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது. (26)

### - மன்னார் மாவட்டத்தில் -

# மாந்தை வடக்கு ப.நோ.கூ.ச சிறந்த சங்கமாகத் தெரிவு

மன்னார் மாவட்டத்தில் இயங்கி வரும் கூட்டுறவுச் சங்கங்களில் மாந்தை வடக்கு ப.நோ.கூ. சங்கம் சிறந்த சங்கமாகத் தெரிவாகியுள்ளது. 81வது அனைத்துலக கூட்டுறவு தினத்தையொட்டி வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கமைவாக மன்னார் மாவட்டத்திலியங்கும் 07 ப.நோ.கூ.சங்கங்களினதும் செயற்பாடுகளை மதிப்பீடு செய்த மன்னார் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் இராணுவ கட்டுப்பாடற்ற பகுதியில் இயங்கிவரும் மேற்படி சங்கத்தினை செயற்திறன் மிக்க சிறந்த சங்கமாக தெரிவு செய்து கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

சிறிலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பு நடவடிக்கையினால் அடம்பன் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து மடுவில் இயங்கும் போது தற்போது சமாதான சூழலில் வட்டக்கண்டலில் இயங்கி வரும் போதும் மேற்படி சங்கத்தின் நிர்வாகச் செயற்பாடுகள் கணக்கு வைக்கும் ஒழுங்கு முறைகள், அங்கத்தவர்களுக்கும், மக்களுக்கும் ஆற்றிய சேவைகள், புதிய தொழில் முயற்சிகள் போன்ற பல்வேறு அம்சங்களைக் கவனித்து இச்சங்கம் முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் தெரிவிக்கின்றார்.

போர் அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்து பல்வேறு வழிகளிலும் போராட்டத்திற்கு உதவி செய்தும் பொருளாதார தடைகளின் மத்தியிலும் சிறப்பான சேவைகளையாற்றி இலாபகரமாக இயங்குகின்ற மேற்படி சங்கம் சிறந்த சங்கமாக மன்னார் மாவட்டத்தில் தெரிவானது குறிப்பிடத்தக்கதாகும்.

# பெங்களூர் பிரகடனத்தில் ஜே.ஆர்.தெரிவித்த இடைக்கால சபைபோன்றதே அரசின் புதிய யோசனைகள்

### ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தகவல்

ஐக்கியதேசிய முன்னணியால் இப்பொழுது சமர்பிக்கப்பட்டுள்ள வடக்குக் கிழக்கிற்கான நிர்வாகக் கட்டமைப்பு முன்னர் ஜே.ஆர். ஜெயவர்த்தன பெங்களூர் பிரகடனத்தில் தெரிவித்த இடைக்கால சபை போன்றதாகும் என ஐக்கிய தேசிய முன்னணி வட்டாரங்கள் கூறியுள்ளன எனவும் இச்சபையில் விடுதலைப்புலிகள் அமைப்பு மட்டுமே தமிழர் சார்பில் பங்கேற்பார்கள் எனவும் இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் குறிப்பிட்டிருந்தார்.'

அவரது நிலவர அறிக்கையில் அரசாங்கத்தின் யோசனைகள் பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

விடுதலைப்புலிகளுக்கு அரசாங்கம் அனுப்பி வைத்துள்ள வடகிழக்கிற்கான இடைக்கால நிர்வாகம் பற்றிய திட்டவரைபின்படி அமைக்கப்படவுள்ள நிர்வாகசபையில், விடுதலைப்புலிகளின் பெரும்பான்மையான பங்கேற்புடன் அரசாங்க தரப்பிலிருந்தும் (இதில் பொ.ஐ.முவினரும் உள்ளடக்கப்படுவர்) முஸ்லிம் காங்கிரஸ் தரப்பிலிருந்தும் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள்.

இடைக்கால நிர்வாகத்தின் தலைவர் நியமனம்:-

இதேவேளை இந்த இடைக்கால நிர்வாக சபைக்கான தலைவரை நியமிப்பது பற்றி இரண்டு மாற்று வழிகளை அரசாங்கம் பிரயோகித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

இதன்படி ஒரு மாற்று வழியில் விடுதலைப் புலிகளையும் அரசாங்கத்தரப்பையும் சேர்ந்த இருவர் தலைமைப் பொறுப்பை ஏற்கலாம். அவர்கள் இருவரும் சபையின் எந்தத் தீர்மானத்தின் மீதும் ''வீட்டோ'' அதிகாரத்தைக் கொண்டிருப்பர்.

இரண்டாவது மாற்றுவழியின் படி -சபையிலுள்ள உறுப்பினர்களிலிருந்து தலைவர் தெரிவு செய்யப்படலாம். இவ்வாறான தெரிவு நடைபெறும் பட்சத்தில் சபையின் முடிவுகள் பெரும்பான்மை உறுப்பினர்களின் சம்மதத்தைப் பெறுவதுடன், சபையிலுள்ள முஸ்லீம் அல்லது சிங்கள சமூகத்தின் உறுப்பினர்களின் பெரும்பான்மைச் சம்மதத்தையும் பெறவேண்டும்.

இடைக்காலநிர்வாகத்திலுள்ள அதிகாரங்கள்:-

பொலிஸ் மற்றும் பாதுகாப்பு, காணி, வரிவிதிப்புத்தவிர்ந்த- புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியேற்றப் பரப்புக்களில் இடைக்கால நிர்வாகம் அதிகாரங்களைக் கொண்டிருக்கும்.

புனர்வாழ்வு, புனரமைப்பு மீள்குடியேற்றம் ஆகிய விடயங்களில் கொள்கை வகுத்தலையும், அமுல்படுத்தலையும் கண்காணித்தலையும் இடைக்கால நிர்வாகசபை கவனித்துக் கொள்ளும்.

இதேவேளை இந்த இடைக்கால நிர்வாக சபைக்கு விசேட ஆணையாளர் ஒருவரை நியமிப்பது பற்றியும் இவரது கடமைகள் பற்றியும் அரசின் திட்டவரையில் குறிப்பிட்டிருக்கின்றது.

நிதி வழங்கப்படும் முறைகள்:-

இடைக்கால நிர்வாக சபை- திட்டங்களுக்கான நிதி வளங்களை வடகிழக்கு புனர்வாழ்வு நிதியத்திடம் இருந்து பெற்றுக்கொள்ளும்.

இதேவேளை, வடகிழக்கு புனர்வாழ்வு நிதியம் தவிர்ந்த ஏனைய நிதியுதவிகள் விசேட நிதியமொன்றினூடாக வழங்கப்படும்.

மாவட்டக் குழுக்கள்:-

இடைக்கால நிர்வாக சபைக்கு உதவுவதற்கென, மாவட்ட அடிப்படையிலும் குழுக்கள் நியமிக்கப்படும். மாவட்டக் குழுக்களுக்கான தலைவர் இடைக்கால நிர்வாக சபை உறுப்பினர்களிலிருந்து தெரிவு செய்யப்படுவர்.

ஒவ்வொரு மாவட்டத்திற்குமான உறுப்பினர்களை இடைக்கால நிர்வாக சபையே தெரிவு செய்யும். இதன்போது - இன விகிதாசாரம் கவனத்தில் எடுக்கப்படும்.

இந்த மாவட்டக் குழுக்களுக்கு - அந்தந்த மாவட்ட அரச அதிபர்கள் செயலாளராகவும் கடமையாற்றுவர்.

இடைக்கால நிர்வாகசபை மேற்கொள்ளும் அபிவிருத்தித்திட்டங்களை உரியமுறையில் செயற்படுத்துவதற்கு, ஒவ்வொரு மாவட்டக் குழுவும் உதவும். மாவட்ட சபைகள் தமது செயற்பாடுகளை இலகுவாக்கிக் கொள்வதற்காக, மாவட்ட அளவில் உபகுழுக்களையும் அமைத்துக் கொள்ள முடியும்.

இடைக்கால நிர்வாகசபையின் ஏனைய குழுக்கள்:-

இடைக்கால நிர்வாகசபையானது தனது பணிகளை வலுவுடன் மேற்கொள்வதற்காக மூன்று விசேட குழுக்களை அமைத்துக் கொள்ளலாம். பொருளாதார விவகாரங்கள், உட்கட்டமைப்பு, அத்தியாவசியத் தேவைகள் ஆகியன மூன்று பிரிவுகளிலும் இக்குழுக்கள் அமைக்கப்படும்.

இவற்றிற்கு உறுப்பினர்களாக நான்கு உறுப்பினர்களுக்கு மேற்படாதவர்கள் இடைக்கால நிர்வாக சபையில் இருந்தும் குறிப்பிட்ட துறையின் நிபுணத்துவம் பெற்றவர்களிடமிருந்தும் நியமிக்கப்படுவர். இந்தக் குழுக்களுக்கான தலைவர் இடைக்கால நிர்வாகசபையில் இருப்பது அவசியமானதாகும்.

இடைக்கால நிர்வாகசபையின் கால எல்லை:-

இது அரசாங்கத்தினாலும் விடுதலைப் புலிகளினாலும் தீர்மானிக்கப்படும். இந்தக் கால எல்லை பற்றி ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை இருதரப்பும் சந்தித்துக் கொள்ளும்.

# மூன்று மாதங்களில் சிறிலங்கா பொதுத்தேர்தலை எதிர்கொள்ளும்?

### - அவதானிகள் சிலர் கருத்து

(கொழும்பு)

சிறிலங்கா இன்னும் மூன்று மாதங்களில் ஒரு பொதுத் தேர்தலை எதிர்கொள்ளும் என்று அவதானிகள் சிலர் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி. பி.க்கும் இடையிலான கூட்டணி அமைக்கப்பட்டதும் ஐ.தே.க. முன்னணி அரசை கலைத்துவிட்டு சிறிலங்கா சனாதிபதி புதிய தேர்தல் ஒன்றுக்கு அழைப்பு விடுப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டு கட்சிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளில் சனாதிபதி நேரடியாகவே ஈடுபட ஆரம்பித்திருப்பது விரைவில் இலங்கை ஓர் தேர்தலை எதிர்கொள்வதற்கான சமிக்ஞையாகவே கருதப்படுகின்றது.

# பொ.ஐ.முன்னணி விரைவில் செயலிழக்கும்

(கொழும்பு)

நான்கு கட்சிகள் இணைந்து அமைத்த பொ.ஐ.முன்னணி விரைவில் செயலிழந்துவிடும் என்று அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பி.க்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டதும் பொ.ஐ.முன்னணி செயலிழக்கும் என்று நம்பப்படுகின்றது.

ஜே.வி.பியுடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சி பேச்சுவார்த்தை நடத்தி வரும் இவ்வேளையில் இவ் விடயத்தில் இடதுசாரிகள் அதிருப்தி கொண்டுள்ளமை தெரிந்ததே.

# குரங்கு பாஞ்சான் முகாம் பற்றி நோர்வேக்கு அறிவிக்கப்படும்

### சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்

(கொழும்பு)

திருமலை குரங்கு பாஞ்சானில் விடுதலைப் புலிகளின் முகாம் இதுவரை அகற்றப்படாதது குறித்து நோர்வேயின் கவனத்திற்குக் கொண்டு வர இருப்பதாக சிறிலங்கா அரச தரப்பு தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் தமது முகாமை அங்கிருந்து அகற்றாது விட்டால் அது குறித்து நோர்வேயின் நேரடிக் கவனத்துக்கு கொண்டுவரப்படும் என்று படைத்துறை அமைச்சின செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

# பேருந்தில் அடாவடித்தனம்; நால்வர் பொலிசில் ஒப்படைப்பு!

முகமாலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த பேருந்தினுள் அட்டகாசம் புரிந்த நால்வர் மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்கள்.

நேற்று முன்தினம் முகமாலையிலிருந்து பயணிகளை ஏற்றிச் சென்றுகொண்டிருந்த பேருந்தை நாவற்குழிப்பகுதியில் இடைமறித்த நால்வர் அந்தப் பேருந்தில் ஏறியதுடன் அதில் ஏனைய பயணிகளை ஏறவிடாமல் அடாவடித்தனம் செய்தார்கள். அத்துடன் சாரதியைப் பேருந்து ஓட்டவிடாது அடாவடித்தனமும் புரிந்தார்கள்.

இதனைக் கண்ட மக்கள் நால்வரையும் மடக்கிப் பிடித்து பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளார்கள். (33)

# இந்திய, பாகிஸ்தான், பங்களாதேஷ் பிரசைகள் 114 பேர் அண்மையில் கைது!

### - இத்தாலி செல்ல தங்கியிருந்தனர்

(கொழும்பு)

சட்டவிரோதமாக இத்தாலி செல்வதற்கு கண்டியில் தங்கியிருந்த 114 பேரை கண்டிப் பொலிசார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

பூவேலிக்கடை பகுதியிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டதாகக் கண்டி உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களில் 83பேர் இந்தியர்களும் 22 பாகிஸ்தானியர்களும் 9 பங்களாதேசியரும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் ஒரு மாதத்துக்கு முன்னரே இலங்கை வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோதமாக இலங்கையூடாக இத்தாலிசெல்ல முற்பட்ட 489 பேர் இம்மாத்திற்குள் மட்டும் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கரபந்தாட்ட அங்குரார்ப்பணக்கூட்டம்

கிளி. மாவட்ட கரபந்தாட்டசங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நேற்று மாலை தமிழீழ விளையாட்டுத் துறைச் செயலகத்தில் நடைபெற்றது.

கிளி.மாவட்ட விளையாட்டு அலுவலர் கனகராசா தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் கிளிநொச்சி பிரதேச விளையாட்டு அலுவலர்கள் வன்னி விளையாட்டுத் துறை பொறுப்பாளர் ராஜா, கிளி. மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் தேவன், விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

## சட்டவிரோதக் குடியேற்றம்; தடுக்க அவுஸ். தீவிர முயற்சி

(மெல்போன்)

இலங்கையர்களின் சட்டவிரோதக் குடியேற்றத்தைத்தடுக்க அவுஸ்திரேலியா தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இது குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது குறித்து சிறிலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அவுஸ்திரேலியாவின் குடிவரவு கலாச்சார அமைச்சர் சிறிலங்காவுக்கு வரவுள்ளார்.

இவர் சிறிலங்காவில் தங்கியிருக்கும்போது வெளியுறவு அமைச்சர், உள்துறை அமைச்சர் ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

## சாவு அறிவித்தல்

### வைத்திலிங்கம் செல்லையா (மனேச்சர்)

*அளவெட்டி கும்பிளாவளைப் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த வைத்திலிங்கம் செல்லையா (மனேச்சர்) கடந்த 19.07.2003 அன்று காலமானார். அன்னார் சோதிப்பிள்ளையின் அன்புக் கணவரும் கந்தசாமி (வங்கியாளர், மக்கள் வங்கி, கிளிநொச்சி), புவனேஸ்வரி, பாலசுப்பிரமணியம் (இலங்கை உப்புக் கூட்டுத்தாபனம்), பாலகௌரி, ஞானாம்பிகை, ஆறுமுகர் (சுவிஸ்), பரமேஸ்வரன் (ஆசிரியர், வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம்), விக்கினேஸ்வரன் (ஜேர்மன்) கனேஸ்வரன் (போராளி தமிழ்க்கோ-நிதித்துறை), இராஜேஸ்வரி, கனகேந்திரன் (ஆசிரியர் உருத்திரபுரம் மகாவித்தியாலயம்) கனேசாயினி (சுவிஸ்) ஆகியோரின் தந்தையும், ரவீந்திரன், சந்திரகுமார், விமலநாதன் (நீர்ப்பாசன இலாகா கிளிநொச்சி), இராஜேஸ்வரன், (அதிபர் ஒலுமடு மகாவித்தியாலயம்), மோகன் (சுவிஸ்), லீலாதேவி, சிவேஸ்வரி, சிவாசினி, வதனி (சுவிஸ்), சுமதி (ஆசிரிய மாணவி இரண்டாம் வருடம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுதர்சன் (தமிழீழ காவல்துறையின் சீர்திருத்தப் பிரிவு கிளிநொச்சி), சுதர்சினி (போராளி கானப்பிரியா சோதியாபடையணி) நிதர்சன், கஜன், கஜந்தன், மதன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 20.07.2003 அன்று அளவெட்டியில் அவரது இல்லத்தில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.*

- தகவல்- சுதர்சன் (3562)

# வெளியாட்களின் 'சனநாயக' திணிப்பை ஈராக்கிய மக்கள் விரும்பவில்லை!

## – ஐ.நா. பொதுச் செயலர் கருத்து

**ஈராக்கிய மக்கள் தம்மீது சனநாயகம் வெளியாட்களினால் திணிக்கப்படுவதை விரும்பவில்லை. தற்போது சட்டம் ஒழுங்கை சமாளிப்பதே அவர்களது அக்கறையாக உள்ளது என ஐ.நா. சபையின் தலைமைச் செயலர் கொபி அனான் கூறியுள்ளார்.**

ஈராக் போருக்கு பின்னர் தமது முதலாவது முக்கிய அறிக்கையை அவர் ஐ.நா. பாதுகாப்பு சபை உறுப்பினர்களுக்கு அனுப்பியுள்ளார்.

ஈராக்கில் புதிய அரசு ஏற்படுவதற்கான அரசியல் மாற்றத்திற்கு உதவுவதில் ஐ.நா.வின் பங்கிற்கான திட்டம் பற்றியும் அவர் அதில் கூறியுள்ளார்.

சதாமின் ஆட்சி வீழ்ச்சிக்குப் பின்னர் பாக்தாத் போன்ற நகரங்களின் வாழ்க்கை நிலையினை மேம்படுத்த அமெரிக்கா தவறிவிட்டதாகவும் அவர் விசனம் தெரிவித்துள்ளார்.

கொபி அனானினால் 21பக்கங்களில் தயாரிக்கப்பட்ட இவ் அறிக்கை ஐ.நாடுகளின் பாதுகாப்புச் சபையில் நாளை விவாதிக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## இடைநிறுத்தம்

அமெரிக்க சமஷ்டி நீதிமன்றம், புஷ் நிர்வாகம் ஈராக்கில் கைப்பற்றிய சொத்துக்களை யுத்தத்திற்குப் பின்னர் அந்நாட்டைக் கட்டியெழுப்பும் பணிக்கு பயன்படுத்துவதை நேற்று முன்தினம் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது. அதேவேளை அமெரிக்க மாவட்ட நீதிபதி றிச்சேட், ரொபேட் ஈராக்கின் மறுசீரமைப் [illegible] ஒதுக் [illegible] நிதி [illegible] பயன் [illegible] தற்காலிக தடை [illegible] வழங்கியுள்ளார்.

## தென் ஈராக்கில் தாக்குதல் 2 அமெரிக்கப் படையினர் பலி!

### – மூவருக்கு படுகாயம்

(பாக்தாத்)

ஈராக்கின் தென்பகுதி நகரான மொசூலில் நேற்று ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் இரு அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டனர். மற்றும் மூவர் படுகாயமடைந்தனர்.

இராணுவ வாகனத் தொடரணி ஒன்றின் மீது ரொக்கட் மற்றும் துப்பாக்கிகளால் இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக பாக்தாத்திலுள்ள அமெரிக்க இராணுவப் பேச்சாளர் ரொட் புருடன் தெரிவித்தார்.

அதேசமயம், ஆயுத தாரிகள் மத்தியில் இழப்புக்கள் ஏற்பட்டதா என்ற தகவல் வெளியாகவில்லை.

# லைபீரிய கிளர்ச்சிப் படைகள் முன்னேற்றம் சமாதான முயற்சிகள் கேள்விக்குறி

லைபீரிய கிளர்ச்சி வாதிகள் அரசாங்கப் படைகளின் பாதுகாப்பு நிலைகளைத் தகர்த்து முன்னேறியதை அடுத்து சமாதான முயற்சிகள் கேள்விக்குறியாகியுள்ளன.



லைபீரிய தலைநகரில் மீண்டும் ஏற்பட்ட சண்டை காரணமாக இடம்பெயர்ந்து செல்லும் மக்கள்.

கடந்த வெள்ளிக்கிழமை நடந்த இச்சம்பவத்தினால் லைபீரியத் தலைநகர் மொன்ரோவியாவில் மக்கள் மத்தியில் கடும் பீதி நிலவுகின்றது.

தலைநகரின் 12 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள பிரதான பாலம் ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளதையடுத்து, மேற்காபிரிக்க மற்றும் அமெரிக்கப் படைகள் தலையிட்டு, அமைதியை ஏற்படுத்தக் கூடிய சாத்தியக் கூறுகள் அருகி வருவதாக அரசியல் ஆய்வாளர்கள் கூறி வருகின்றனர்.

லைபீரிய சனாதிபதி பதவி விலக வேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கையும் வலுவிழந்து காணப்படுகின்றது.

கடந்த மாதம் லைபீரிய கிளர்ச்சிப் படைகள் தலைநகர் மொன்ரோவியாவிற்குள் ஊடுருவி இடம்பெற்ற மோதலில் நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டார்கள். ஆயிரக்கணக்கானோர் வீடு வாசல்களை விட்டும் வெளியேறியுள்ளனர்.

எனினும் சனாதிபதி டெய்லரின் படைகள் கிளர்ச்சியாளர்களைப் பின்வாங்கச் செய்திருந்தன.

அதேசமயம், லைபீரியாவில் வன்முறைகள் தீவிரமாகியுள்ளன. அமெரிக்கா, கவலை தெரிவித்ததோடு அந்நாட்டின் பிரச்சினையைத் தீர்த்து வைக்க ஒரேயொரு வழி, கானாவில் மேற்கொள்ளப்படும் சமாதான நடைமுறையாகும் எனத் தெரிவித்துள்ளது.



தென்கொரிய சனாதிபதியுடன் பேச்சு நடத்த வருகை தந்துள்ள பிரிட்டிஷ் பிரதமர் தனது மனைவியுடன் சியோல் நகர் விமானத் தளத்தில் கையசைக்கிறார்.

## ஆப்கானில் தேசியப்படை உருவாக்க தீவிர முயற்சி

(காபூர்)

ஆப்கானிஸ்தானில் தேசியப் படையொன்றை உருவாக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

போரினால் சிதைவடைந்துள்ள ஆப்கானை மீளக் கட்டியெழுப்புவதில் இந்த நடவடிக்கையும் முக்கிய இடம் பெறுகின்றது. ஆனால் இதற்கு பிராந்திய ஆயுதக் குழுக்கள் அனைத்தும் முன்வருமா என்பது சாத்தியமில்லையென கூறப்படுகிறது.

ஆப்கானிஸ்தானின் தேசியப் படையை உருவாக்கும் வகையில் பிராந்திய ஆயுதக்குழுக்கள் தங்கள் ஆயுதங்களை களைய தயாராக இருக்க வேண்டுமென அந்நாட்டின் பிரதிப் படைத்துறை அமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தனது வேண்டுகோளை ஆப்கான் அரசு ஏற்றுக்கொண்டால் தனது படையை முதலில் கலைக்க தான் தயாராகவுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

## மும்பை தொடர் குண்டு வெடிப்பு குற்றவாளிகளை அனுப்ப மறுப்பு

(புதுடில்லி)

மும்பைத் தொடர் குண்டு வெடிப்புகளில் தொடர்புடைய அபுஸலீம், மோனிகா பேடி ஆகிய இருவரையும் இந்தியாவுக்கு அனுப்ப வேண்டும் எனும் சி.பி.ஐ.யின் கோரிக்கையை போர்த்துக்கல் நீதிமன்றம் நிராகரித்துவிட்டது.

மும்பை தொடர் குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்ட அபுஸலீமையும், மோனிகா பேடியையும் இந்தியா கொண்டுவர சி.பி.ஐ. தீவிர முயற்சி மேற் கொண்டுள்ளது.

அபுஸலீமை இந்தியா கொண்டுவரும் முயற்சியில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. போலி பாஸ்போட் மூலம் இந்தியாவிலிருந்து வெளிநாடு சென்ற வழக்கை விசாரிப்பதற்காக மோனிகா பேடியை இந்தியாவுக்கு அனுப்பும் படி போர்த்துக்கல் நீதிமன்றத்தில் சி.பி.ஐ வழக்குத் தொடர்ந்தது.

ஆனால், மோனிகா பேடி மீது போர்த்துக்கல் நாட்டு நீதிமன்றில் மோசடி வழக்கு நிலுவையில் இருப்பதால் அவரை இந்தியா அனுப்ப நீதிமன்றம் மறுத்துவிட்டது.


இதை எதிர்த்து மேன்முறையீடு செய்ய சி.பி.ஐ. முடிவு செய்துள்ளது.

## ஒக்டோபரில் ஏவப்படும்

(புதுடில்லி)

இந்தியாவின் பி. எஸ். எல்.வி-5 ராக்கட் ஸ்ரீகரி கோட்டாவில் இருந்து வரும் ஒக்டோபர் மாதம் விண்ணில் செலுத்தப்படக் கூடும் என திரவ எரிபொருள் அமைப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த ரொக்கட்டிற்கான இரண்டாவது, மூன்றாவது திரவக் கட்டங்கள் இந்த மையத்தில் தயாரிக்கப்பட்டு விட்டன. நான்காவது கட்டம் இறுதி சோதனைகளுக்காக திருவனந்தபுரம் விக்ரம் விணவெளி மையத்திற்கு அனுப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.நில, கடலோர ஆய்வுகளுக்கான செயற்கைக் கோளை செலுத்த இந்த ராக்கெட் பயன்படும் எனக் கூறப்படுகின்றது.



வெனிசுவெலா தலைநகர் கரகாஸில் ஏற்பட்ட வெள்ளத்தால் அள்ளுப்பட்டுச் சென்ற வாகனங்கள்.

## ஈராக் விவகாரத்தில் ஐ.நா. உதவியை நாட புஷ் நிர்வாகத்திற்கு நெருக்கடி

ஈராக் விவகாரத்தில் அமெரிக்கா ஐ.நா.வின் உதவியை நாட வேண்டிய நிலை உருவாகி வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அமெரிக்காவில் இருந்து வெளியாகும் செய்தித்தாள்கள் இது குறித்து தெளிவாகக் கூறிவருகின்றன.

ஈராக் தொடர்பாக அமெரிக்கா கொண்டுள்ள நிலைப்பாடுகளினாலேயே இந்த நிலைமை தோன்றியுள்ளது என செய்தித்தாள்கள் சுட்டிக் காட்டி வருகின்றன.

இந்தியா, பிரான்ஸ், ஜேர்மனி உட்பட பல நாடுகள் ஈராக்கிற்கு ஐ.நா. பாதுகாப்பு சபையின் அனுமதியின்றி அமைதி பணிகளுக்காக துருப்புக்களை அனுப்ப மறுத்து விட்டதும். போர் செலவுகள் அதிகரித்து வருவதும் ஈராக்கில் அமெரிக்க வீரர்கள் அன்றாடம் கொல்லப்படுவதும் புஷ் நிர்வாகத்திற்கு நெருக்குதலை ஏற்படுத்தி வருகின்றன.

ஈராக் மீது போர் தொடுக்கும் முன் ஐ.நா. சபையை ஒதுக்கிய அமெரிக்கா இந்த நெருக்குதல் காரணமாக தற்போது ஐ.நா. சபையே மீண்டும் அணுகும் நிலை ஏற்பட்டு வருவதாக அமெரிக்கப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டு வருகின்றன.

# ஓயாத அலைகள்-01 வெற்றிப் பெருவிழா!

## முல்லைத் தளம் வெல்லப்பட்ட இந்நாள் போரியல் வரலாற்றில் புதிய அத்தியாயம்...!

### - கட்டளைத் தளபதி கேணல் தீபன்



முல்லைத் தளம் வெற்றிகொள்ளப்பட்ட இந்நாள் தமிழீழ விடுதலைப் புலிகளின் போரியல் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் எழுதப்பட்ட நாளாகும் என முல்லைத் தளம் வெற்றி கொள்ளப்பட்டதன் 7ஆம் ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் வடபோர் முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தளமானது ஒரு பெரும் கூட்டுப் படைத் தளமாக ஆக்கிரமிப்பின் சின்னமாக அமைந்திருந்தது. இத்தளம் 90ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏறத்தாள 50 அல்லது 60 இராணுவத்தினரைக் கொண்ட ஒரு சிறிய முகாமாகவே இருந்தது. இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இராணுவம் இம்முகாமை ஒரு பெரும் தளமாக விஸ்தரிக்கப்போகின்றது என்பதை அறிந்த எமது தலைமை இராணுவத்தின் அந்த முயற்சியை முற்றாகத் தடுக்க வேண்டும் என்பதற்காக முன்னர் சிறி தாக இருந்த முல்லை முகாம் முற்றாகத் தாக்கி அழிக்கும் வகையில் இப்படை முகாம் மீது ஒரு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அந்தவேளை, எம்மால் மேற்கொள் ளப்பட்ட தாக்குதல் முயற்சி வெற்றியளிக்கவில்லை.



அந்த முகாம் தகர்ப்பு முயற்சியின் பின் சிறிதாக இருந்த படை முகாம் எதிரியின் திட்டத்திற்கு அமைவாக முள்ளிவாய்க்காலில் தரையிறக்கப்பட்ட இராணுவம் முன்னேறி இந்த முல்லை நகரப் பிரதேசத்தை பெரியள வில் ஆக்கிரமித்துக் கொண்டது.

இதன் பின்னர் இந்தத் தளம் மிகவும் பலப்படுத் தப்பட்டு முல்லைத்தீவில் பெரும் ஆக்கிரமிப்புச் சின்னமாக படிப்படியாகப் பலப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது.

இந்தப் படைத் தளத்தைப் பொறுத்தவரை நாம் ஓயாத அலைகள் - 01 நடவடிக்கையை மேற்கொண்டு இந்தத் தளத்தை கைப்பற்றும்போது இந்தப் படைத்தளம் சுமார் 11 கிலோ மீற்றர் விஸ்தீரணத்தை தன்னகத்தே கொண்டு 2000க்கும் மேற்பட்ட படை வலுவைக் கொண்டிருந்தது. அத்துடன் சுமார் பதினொரு கிலோ மீற்றர் விஸ்தீரணம் கொண்ட காப்பரண் தொடர்கள் அனைத்தும் 25 மீற்றர் தூரத்திற்கு ஒன்றாக நன்கு பலப்படுத்தப்பட்ட ஒரு பெரும் பலம் பொருந்திய முகாமாக இம்முகாம் அமைக்கப்பட்டிருந்தது.

இத்தகைய பாதுகாப்பு அமைப்புக்களைக் கொண்ட இம்முகாம் சிறிலங்கா இராணுவத்தின் முதல்தர பாதுகாப்பு நெறிமுறைகளுக்கு அமைவாக உள்ள பலம் பொருந்திய இராணுவ முகாமாகக் கருதப்பட்டிருந்தது. இத்தளத்தில் ஆட்லறி பீரங்கிகள், மோட்டார் பீரங்கிகள், கவச வாகனங்கள் மற்றும் கடற் கண்காணிப்புக் கருவிகள் என தாக்குதல் திறன்மிக்க ஆயுதங்கள் உள்ளடக்கப்பட்ட ஒரு பெரும் பிரிகேட் தளமாக இப்படைத்தளம் விளங்கி யிருந்தது.

தனியே கடல் விநியோகத்தை மாத்திரம் மையமாகக் கொண்டு தனிமைப்படுத்தப்பட்டிருந்த இம்முகாம் ஒரு பெரும் பலம் மிக்க முகாமாகவும் விளங்கியது. இந்தவேளையிலேயே சூரியக்கதிர் நடவடிக்கையின் பின் நாங்கள் வன்னிக்குப் பின்வாங்கியபோது இந்த முல்லை பெருந்தளத்தை நாங்கள் தாக்கி அழிக்க வேண்டும் என்கின்ற திட்டத்தை எமது தலைவர் நுணுக்கமாகத் திட்டமிட்டார். அதற்கமைய என்னைத் தலைவர் அழைத்து இந்தப் பெரும் தளத்தைத் தாக்கி அழிப்பதற்கான வேவுப் பணியைக் குறிப்பிட்ட காலத்தில் வேகமாகச் செய்து முடிக்க வேண்டும் எனப் பணித்திருந்தார்.

1996ஆம் ஆண்டு முதலாம் மாதம் வேவு நடவடிக்கைகளுக்காக நான் குறிப்பிட்ட போராளிகளுடன் எனது பணியை இப்பகுதியில் மேற்கொண்டேன். அந்த வேளையில் இந்த முகாமைத் தாக்கி அழிப்பதற்காக வெற்றிகரமாக இழப்பின்றி நாம் வெல்வதற்காக வேவு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த அந்தப் போராளிகள் ஒவ்வொரு நாளும் தங்களை வருத்தி மிகவும் கடினமான உழைப்பின் மத்தியில் இப்பெரும் தளத்தின் அனைத்து தகவல்களையும் திரட்டி ஒரு முழுமைபெற்ற வேவுத் தகவல்களை எமக்குத் தந்தார்கள்.

இத்தகைய வேவுத் தகவல்களைப் பெறுவதற்காக ஐந்து போராளிகளை நாங்கள் இழந்திருக்கிறோம். பத்திற்கும் மேற்பட்ட போராளிகள் அங்கங்களை இழந்திருக்கிறார்கள். ஏனென்று சொன்னால் இந்த முல்லைப் பெருந்தளம் பெரும் ஆளணியுடன் இருந்ததுடன் மட்டுமல்லாது செறிவான கண்ணிவெடி வயல்களையும் கொண்டிருந்தது.

எனவே இவ்வாறு கிடைத்த தகவல்களை வைத்து முகாமைத் தாக்குவதற்கு எமது தலைவர் மதிநுட்பமான திட்டத்தைத் தீட்டினார். தலைவரது திட்டத்தின்படி இந்தத் தளத்தை அழிப்பதற்கான 17-07-1996 அன்று முகாம் தாக்குதல்களுக்கான நகர்வுகள் ஆரம்பிக்கப்பட்டு 18ஆம் திகதி தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டது. 19ஆம் திகதி பிற்பகல் இரண்டு மணிக்கு முகாமை நாங்கள் கைப்பற்றியிருந்தோம்.



இந்த பெருந்தளத்தைக் கைப்பற்றுவதற்காக ஏகப்பட போராளிகளின் தியாகம் அவர்களின் அர்ப்பணிப்புக்கள் அவர்கள் சிந்திய இரத்தங்கள் தான் இந்தத் தள வெற்றிக்கு எம்மை இட்டுச் சென்றது. அந்த வகையிலேயே இந்தத் தளத்தை வெற்றி கொள்வதற்காக எமது படையணிகள் வன்னி, மன்னார், திருமலை, மட்டு, அம்பாறை, யாழ்ப் பாணம், வவுனியா போன்ற இடங்களைச் சேர்ந்த பல போராளிகள் இந்தக் களத்திலேயே வீரச்சாவடைந்துள்ளனர். இந்த மண் வெற்றி கொள்ளப்பட்டது தமிழீழ மக்களுக்குக் கிடைத்த ஒரு பெரும் வெற்றியாகும்.

எங்கள் தலைவர் இந்த தளத்தில் வைத்து கைப் பற்றிய ஆட்லறி பீரங்கிகளை எதிரிக்கு எதிராக திருப்பித் தாக்கி பெரும் வெற்றிகளைக் குவித்திருக்கின்றார். அத்த கைய பெருவெற்றிகள் இந்த முல்லைத்தீவுத் தளத்தில் இருந்துதான் ஆரம்பமாகியது.

இந்த ஓயாத அலைகள் - 01 சமரானது எமது போரியல் வரலாற்றிலே ஒரு மிகப் பெரிய வித்தியாசமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்குரிய ஒரு அத்திவாரமாக இருந்த சமராகக் கருதுகின்றோம். அந்த சமராடியபோது முல்லை மக்களும் அதனுடன் இணைந்த மக்களும் அலை அலையாக வந்து இந்தக் களத்திலே பெரும் உதவிகளை எமக்குச் செய்தார்கள்.

இந்த முல்லைத்தீவு மண்ணைப் பொறுத்தவரை அன்றும் சரி, இன்றும் சரி, ஒரு போர்க் குணம் கொண்ட மக்களைக் கொண்ட பிரதேசமாக இருக்கின்றது என்பதை இன்று அவர்கள் போர்க் களங்களில் எமக்குகாட்டியிருக்கிறார்கள். இன்று ஒரு சமாதான நிலைமை ஏற்படு வதற்குக் காரணம் 17685க்கும் மேற்பட்ட மாவீரர்களின் தியாகம்தான் என்பதை மறக்க முடியாது.

அது மட்டுமன்றி நாம் இன்று ஒரு படைபலத்துடன் இருக்கின்றோம். அந்தப் பலம் பேணப்பட வேண்டும். எமது பலம் நிரந்தரமாக இருப்பதை உறுதிப்படுத்துவதுதான் எமது சமாதானத்தை உறுதிப்படுத்துவதற்கான சிறந்த வழியாகும். பலத்தினால்தான் எமது சுதந்திரமான வாழ்வையும் ஏற்படுத்த முடியும் என்பது யதார்த்தமான உண்மை. எனவே, நாங்கள் பலமாக இருக்க வேண்டும் என அவர் உரையில் குறிப்பிட்டார்.

## நிரந்தரமான எமது மக்களின் பலமே இறுதி இலக்கை அடைய வழிவகுக்கும்

### - தளபதி கேணல் விதுஷா



எமது விடுதலையை நாம் நிச்சயமாக நிரந்தரமாக்க வேண்டும். எமது மக்களின் பலம் நிரந்தரமாக இருந்தால் மட்டுமே இறுதி இலக்கை எம்மால் அடைய முடியும். இவ்வாறு மாலதி படையணி சிறப்புத் தளபதி கேணல் விதுஷா தெரிவித்தார்.

முல்லைத்தீவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஓயாத அலைகள்-01 வெற்றிவிழா நிகழ்வில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

நோர்வே பேச்சுவார்த்தைக்கு மத்தியஸ்தம் வகிக்கின்றது. அந்த நாடே ஒரு படை பலத்தை தக்க வைத்துக் கொண்டுதான் இருக்கின்றது. அந்தப் பலத்தை பல வடிவங்களில் வைத்துள்ளது. அதில் ஒரு வடிவம் கட்டாய இராணுவ சேவை. ஒரு யுத்தமே இல்லாத நாட்டில் இப்படி இருக்கும் போது,

நாங்கள் நிச்சயமாக மக்களின் பலத்துடன்தான் போராட்டத்தை நடத்த நினைக்கின்றோம். மக்களின் உணர்வுகளே எமக்குப் பெரும் பலம். இந்தப் பலம் தொடர்ந்தும் இருந்தால் தான் நாங்கள் பேச்சுவார்த்தை யிலும் வெற்றியீட்டக் கூடியதாக இருக்கும். அல்லது யுத்தம் என்றால் கூட அதில் எம்மால் பாரிய வெற்றிகளை ஈட்டமுடியும்.

எமது பங்களிப்பில் பின்னடைவு என்பதே கூடாது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனையில் சீரழிந்து இருந்த ரயில் பாதை ஒன்றினை சீரமைப்பு செய்வதற்காக உலக நிறுவனங்களால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சிறிலங்கா அரசாங்கத்திடம் நிதி கொடுக்கப்பட்டது.

அந்த நிதி பின்னர் அந்த அரசாங்கத்தால் சிங்களப் பகுதிகளில் உள்ள இடத்திற்கு அதாவது ரயில் பாதை சீரமைப்புக்கு மாற்றீடு செய்யப்பட்டது.

சிங்களப் பகுதி பழைய தண்டவாளங்களை அகற்றி புதியதாக சீரமைத்துவிட்டு, அந்த பழைய தண்டவாளங் களை வாழைச்சேனை ரயில் பாதைக்கு போட்டு, சீரமைத்ததாகக் காட்டினார்கள்.

நாம் நன்றாக யோசிக்க வேண்டும். இந்தச் சிறிய நிதியிலேயே தமிழ்ப் பகுதி சீரமைக் கப்படக் கூடாது என்பதை அடிப்படையாக வைத்தே இந்த வேலைத்திட்டம் நடைபெற்றது எனில், எப்படி எமக்கான பெரும் நிதிகளை அரசு சரியாகக் கையாளும் என்பது தெளிவாகப் புரிகிறது.

எமது போராட்டத்தில் எந்த நிகழ்வையும் எம்மால் பேரம் பேசமுடியாது. நாங்கள் எமது மக்கள் நிம்மதியாக வாழ எம்மால் கேட்கப்படும் ஒரு தீர்வை எமக்குத் தந்தால், எந்தவித பிரச்சினையுமில்லாமல், சமாதானமாக இருக்க முடியும்.

மாறாக எமது போராட்டத்தை பேரம் பேசுபவர்களானால், நாங்கள் எமக்குரிய இலட்சியத்தை மறுபடியும் சண்டையில்தான் பெற்றுக் கொள்ள முடியும்.

சண்டையின் போது பல தடைகள் ஏற்பட்ட போதும், போராளிகள் தீரத்துடன் போராடியே முல்லை மண்ணை மீட்டுள்ளார்கள். இந்த உணர்வு என்றும் மிகவும் முக்கியமானது.

வெற்றிகள் உறுதியாக இருக்க வேண்டுமானால் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

## தேசியத் தலைவரின் ஆழமான திட்டமிடலே வெற்றிவிழாவிற்குக் காரணமாக அமைந்தது

### - முல்லை. பங்குத்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர்



தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனின் ஆழமான திட்டமிடலின் வெளிப்பாடுதான், நாம் இன்று சுதந்திரமாக வெற்றிவிழாக் கொண்டாடக் காரணமாக அமைந்துள்ளதென முல்லைத்தீவு வெற்றிப் பெருவிழா நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய முல்லைத்தீவு பங்குத்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார் தெரிவித்தார்.

எமது சொந்த பூமி, எமது சொந்த மண், எமது தாயகம் மாற்றான் படைகளினால் கைப்பற்றப்பட்டு சின்னா பின்னப்பட்டு இருந்தவேளை, எங்கள் தலைவருடைய நுட்பமான திட்டமிடலிலே, அவருடன் சேர்ந்து இயங்கிய தளபதிகள், போராளிகள், அவர்களுடைய தியாகங்களினால் மீட்டெடுக்கப்பட்ட இந்த பூமியிலே இன்று நாங்கள் சுதந்திரமாக இருப்பதனால் தான் இந்த வெற்றிவிழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம்.

பற்பல ஆண்டுகளாக அகதிகளாக, ஏதுமற்ற ஏதிலி களாக திரிந்த எங்களுக்கு சொந்த மண்ணிலே சொந்த வீட்டிலே குடியிருப்பது எவ்வளவு மகிழ்ச்சிக்குரியதொன்று என்று தெரியும்.

அவர்களுடைய படையெடுப்புக்கள் எல்லாம் எங்களை சின்னாபின்னப்படுத்தி எங்களை வேறு வேறு இடங்களி லெல்லாம் காடு, மேடு, தண்ணீர், பள்ளம் என தள்ளின போது, எவ்வளவு கஷ்டப்பட்டுவிட்டோம்.

அந்த வேதனைகளிலிருந்து மீட்கத்தான் விடுதலைப் புலிகளின் மாபெரும் தியாகத்திலே நாங்கள் இன்று சுதந்திரமாக, சொந்த பூமியிலே, எமது பிரதேசத்திலே சுதந்திரமாக மீளக் குடியேறி இருக்கின்றோம்.

ஆகவேதான் மகிழ்ச்சித் திருவிழாவாக, வெற்றித் திருவிழாவாக நாங்கள் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம்.

தமிழ் மக்களாகிய நாங்கள் நிரந்தரமாக, சுதந்திரமாக, மகிழ்ச்சியோடு எமது மொழி, கலை, கலாச்சாரத்தோடு வளர்ந்து வாழ வேண்டும்.

இதற்கு யாழ். குடா நாட்டில் மக்கள் அடைவதை ஏதோ ஒரு வழியில் தடுத்து கருத்தரங்கு மூலமோ, பரப்புரை மூலமோ வேறு யுக்திகளைப் பயன்படுத்தியோ யாழ்ப்பாணம், கொழும்புப் பகுதிகளில் வாழும் மக்கள், மலையக தமிழ் மக்கள் இப்பிரதேசத்தில் குடியேறினால் நல்லது. இல்லையேல் இப்பிரதேசம் திரும்பவும் கைப்பற்றப்படலாம். அல்லது பாரிய சிங்களக் குடியேற்றங்களுக்கு உட்படுத்தப்படும் பிரதேசமாகவும் மாறிவிடலாம்.

அதனால் இப்பகுதிகளில் பொதுமக்கள் அதிகமாக வந்து வாழ வேண்டும். அதற்கான வழிவகைகளை அமைத்துக் கொடுக்கும் அரசசார்பற்ற நிறுவனங்கள், அரச பணியாளர்கள் இன்றைய கதாநாயகர்களான விடுதலைப்புலிகள் அனைவருக்குமே உண்டு என்றார்.

# கடற்புலிகளின் பாதுகாப்பு இருந்தால் மட்டுமே முன்னர்போல் சுதந்திரமாகத் தொழில் செய்ய முடியும்


## முல்லைத்தீவு கடற்றொழிலாளர் – கண்காணிப்புக் குழு சந்திப்பு

**அ. லோகீசன்**

காலம் காலமாக நாம் இன ரீதியாக ஒடுக்கப்பட்டு வருகிறோம். எம்மீது பெரும் போர் திணிக்கப்பட்டு வந்தது. நாம் அதனை வெற்றி கொண்டோம். ஆனால், இன்றும் எமது உறவினர்கள் கடலில் தொழிலுக்குச் செல்கின்றபோது சிங்களக் கடற்படையால் தாக்கி கொடூரமாகக் கொல்லப்படுகின்ற சம்பவங்கள் இடம் பெறுகின்றன என கடந்த 16ஆம் திகதி நடைபெற்ற சந்திப்பில் முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசத்தில் இச் சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போது கண்காணிப்



புக்குழுத் தலைவர் ரெலவ்சனிடம் சிறிலங்கா கடற்படையினர் தமக்கு இழைக்கும் கொடுமைகளை கடற்றொழிலாளர்கள் விரிவாக எடுத்துக் கூறினர்.

அவர்கள் அங்கு தெரிவித்ததாவது.

கடந்த காலத்தில் இந்திய இராணுவமும் இப்படி சமாதானம் தருவதாக வந்து எம்மைக் கொடூரமாகத் தாக்கி கொலை செய்தது. அப்படியான ஒரு நிலைமை தற்போதைய நோர்வே தலையீட்டுடன் வரமாட்டாது என்கின்ற எதிர்பார்ப்புடன் வாழ்கின்றோம்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்டது முதல் இன்றுவரை எந்த விடயமும் நிறைவேற்றப்படவில்லை. கடற்படையினரின் அத்துமீறிய தாக்குதல்கள் தொடர்ந்தும் நடைபெறுகின்றன. எமது பாதுகாப்புக்காக தமது உயிரைத் தியாகம் செய்கின்ற புலிகளின் மீது நாம் நன்றியுடன் இருக்கின்றோம். எமது பாதுகாவலர்கள் மீது கடற்படை ஒப்பந்தத்தை மீறி நெடுந்தீவில் தொடங்கி இன்று சர்வதேச கடற்பரப்பு வரை தாக்குதல் நடத்தி அவர்களைக் கொன்று வருகின்றது. கடற்படையின் இத்தகைய தாக்குதல்கள் எம்மை மிகவும் ஆத்திரம் அடையச் செய்துள்ளது. இத்தகைய தொடர்ச்சியான அத்துமீறிய தாக்குதல்களுக்கு கண்காணிப்புக் குழுவால் எத்தகைய சரியான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. ஒவ்வொரு முறையும் இத்தகைய சம்பவங்கள் நடைபெற்ற பின்னர் கண்காணிப்புக் குழுவினால் இது போன்ற சம்பவங்கள் நடைபெறாது என உறுதியளிக்கப்படுகிறதே தவிர நடைபெறாது தடுக்க முடியவில்லை.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இன்று வரை கொக்கிளாய், கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் இன்னமும் தமது வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை. எமது பகுதி போரால் பெரும் பாதிப்புக்களை அடைந்தது. ஆனால், இப்பகுதி இதுவரை மீளமைக்கப்படவில்லை. இதுவரை எமது இயல்பு வாழ்க்கை திரும்பவில்லை என முல்லைத்தீவு மக்கள் கண்காணிப்புக் குழுவினருக்குத் தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்த கண்காணிப்புக் குழுத் தலைவர் ரெலவ்சன், 508 நாட்களாகியும் உங்களது இயல்பு வாழ்க்கை திரும்பவில்லை. புனரமைப்புப் பணிகள் மிகவும் மந்தமாகவே நடைபெறுகின்றது என்பதை ஏற்றுக் கொள்கின்றேன் என்றார்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டதன் பின்னரும் நாம் சுதந்திரமாக தொழில் செய்ய முடியாத நிலையுள்ளது. நாம் கடலில் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது எமது பெறுமதியான தொழில் உபகரணங்களையும் வள்ளங்களையும் சிறிலங்காக் கடற்படை தமது பாரிய கப்பல்களால் மோதி மூழ்கடிக்கின்றது. சில வேளைகளில் எமது உயிரைக் கூட பறிக்கின்ற மிகவும் கொடூரமான சம்பவங்கள்கூட இடம்பெற்றிருக்கின்றன.

நாம் மீனவர்கள் என்பதை சிறிய விளக்குகள் மூலமும் ரோச்லைற் மூலமும் வெளிப்படுத்துகிறோம். ஆனாலும், கடற்படையினர் எம்மை யார் என்பதை நன்கு இனம் கண்ட பின்னரே எம்மீது தாக்குதல் நடத்துகின்றார்கள். இதனை நாம் கண்காணிப்புக் குழுவினிடம் பல முறை தெரியப்படுத்தினோம். அவர்கள் அதற்கு தாம் உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக உறுதியளிக்கின்றனர். ஆனாலும், எம்மீது தொடர்ந்தும் தாக்குதல் நடத்தப்படுகின்றது. எமது சொத்துக்கள் அழிக்கப்படுகின்றன. நாம் உயிரைக்கூட இழக்க வேண்டி ஏற்படுகின்றது.

இந்நிலையில், எமது உயிர்கள் இழக்கப்பட்ட பின்பும் எமது சொத்துக்கள் அழிக்கப்பட்ட பின்பும் அதனைக் கண்காணிப்புக் குழுவால் மீண்டும் தர முடியுமா? என கடற்படையினரின் அட்டகாசத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் கண்காணிப்புக் குழுத்தலைவரிடம் தமது ஆதங்கத்தைத் தெரிவித்தனர்.

இந்நிலையில், எமது பாதுகாவலர்களான கடற்புலிகள் கடந்த யுத்தச் சூழலில் எமது பாதுகாப்பிற்காகவும், தொழில் செய்ய வேண்டும் என்பதற்காக எமக்கு பாதுகாப்பு வழங்கி எமது உயிருக்காக தமது உயிரைத் தியாகம் செய்தனர். அவர்களின் தியாகத்தால் நாம் சுதந்திரமாக தொழிலில் ஈடுபட்டோம். ஆனால், தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலில் கடற்புலிகள் ஒப்பந்தத்தை மீறி எந்த தாக்குதலையும் நடத்த மாட்டார்கள் என்பதை நன்கு புரிந்து கொண்ட கடற்படையினர் மிகவும் கரைக்கு வந்து எம்மீது தாக்குதல் நடத்துகின்றார்கள். இதற்கான சரியான தீர்வு எமக்குக் கிடைக்க வேண்டும். கடற்புலிகளின் சுதந்திரமான கடல் நடமாட்டம் கிடைக்கும்போதுதான் நாம் மீண்டும் சுதந்திரமாக தொழில் செய்ய முடியும் எனவும் அப்பகுதி மக்கள் உறுதியாக தம்மை சந்தித்த கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் மேலும் தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்த கண்காணிப்புக் குழுவினர் முல்லைத்தீவு கடற்புலிகளின் மையமாக இருப்பதால் இப்பகுதிகளில் கடற்படையினரின் நடமாட்டம் அதிகமாக உள்ளது எனத் தெரிவித்தனர்.

முல்லைத்தீவில் இருந்து 13 கடல் மைல் தொலைவில் உள்ள கொக்கிளாய் பகுதியில் சிங்கள மீனவர்கள் பெருமளவாகத் திரண்டு வந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் மீது கடற்படை தாக்குதல் நடத்துவதில்லை. எம்மீதுதான் இத்தகைய தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. இதற்கான காரணம் என்ன? என மக்கள் கேள்வி எழுப்பியபோது.

ஆம் முல்லைத்தீவு முதல் பருத்தித்துறை வரையான பகுதிகளில் தொழிலில் ஈடுபட்டு வரும் மீனவர்கள் மீது இத்தகைய தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன என மேலும் தெரிவித்த கண்காணிப்புக் குழுத் தலைவர், தமிழ் மக்கள் என்பதற்காக நீங்கள் தாக்கப்படுகிறீர்கள் என்றால் அத்தகைய தாக்குதல்களை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். இதனைக் கவனத்தில் கொண்டு கடற்படையுடன் கதைத்து இதற்கான முடிவைத் தருவேன் என தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், உங்களது கருத்துக்கள் சரியானவை. கடந்த காலத்தைப் போன்று கடற்படை தற்போது கடலில் இறுக்கமாகச் செயற்படுவதன் காரணம் என்ன? என நீங்கள் கேட்பது சரியானது. உங்களுக்கும் எங்களுக்கும் இடையில் இத்தகைய சந்திப்புக்கள் இடம் பெறுவதன் மூலம் உங்களது பிரச்சினைகளை நாம் அறிய முடிகின்றது. நாம் அறிவதன் ஊடாக இந்த சமாதான முயற்சிகளில் வெற்றி ஏற்படலாம். உங்களது பிரச்சினைகளை எமக்கு உடன் தெரியப்படுத்துங்கள். எங்களுக்கு மட்டும் தெரியப்படுத்தாது பல தரப்பிற்கும் தெரியப்படுத்துங்கள் எனவும் கண்காணிப்புக் குழுத் தலைவர் அப்பகுதி மக்களிடம் கேட்டுக் கொண்டார்.

எமது கடலில் சிங்கள மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். விடுதலைப் புலிகள் தம்மை தாக்கமாட்டார்கள் என்ற உறுதியான நம்பிக்கையின் காரணமாகவே சிங்கள மக்கள் எமது பகுதியில் மீன்பிடிக்கின்றார்கள். ஆனால், எம்மால் எமது பகுதியில் சென்று மீன்பிடிக்க கடற்படை அனுமதிக்கவில்லை என அம்மக்கள் கண்காணிப்புக் குழுவினிடம் தமது பிரச்சினைகளையும் தம்மீது கடற்படையினர் மேற்கொண்டு வரும் தாக்குதல்களையும் தெளிவாக எடுத்துக் கூறினர். □

---

**யாழ். வைத்தியசாலை வாயிலில்**

# மின்சார வசதி இன்மையால் நோயாளர்கள் அவதி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் நுழைவாயில்களில் மின்சார வசதி செய்யப்படாமையால் இரவு நேரங்களில் நோயாளர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றார்கள்.

ஊழியர்கள் நுழைவாயில், வெளிநோயாளர்கள் நுழைவாயில் மற்றும் கிளினிக் நுழைவாயில் ஆகிய இடங்களில் போதிய வெளிச்சம் கிடைக்க ஏற்பாடு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால், இரவு நேரங்களில் அவசர நோயாளர்களுடன் வருகை தரும் வாகனங்கள் நுழைவாயிற்பகுதிகளில் விபத்துக்களைச் சந்திக்கும் அபாயம் இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

---

# அரசின் புதிய வரி அறவீட்டு முறையால் பல கோடி ரூபாய் திறை சேரிக்கு இழப்பு!

**பொதுசன ஐக்கிய முன்னணி சாடல்**

(கொழும்பு)

கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் அறிமுகப் படுத்தபட்ட 'வற்' வரி மூலம் ரூபா இரண்டாயிரம் கோடியை வருமானமாகப் பெறமுடியாது போனமை அவ்வரசு பாரிய பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளமை புலனாகிறது என பொ. ஐ. முன்னணி ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம கூறியுள்ளார்.

பொதுசன ஐக்கிய முன்னணியின் வாராந்த சந்திப்பொன்றின்போது அவர் மேலும் கூறியிருப்பதாவது,

ஆளும் கட்சிக்கு இவ்வாறு ஒரு நிலை ஏற்பட்டிருப்பதால் அடுத்த வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதில் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளது எனவும் இப்படியான சம்பவம் ஒன்று ஏற்பட்டமை இதுவே முதற் தடவை எனவும் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், இவ்வரசாங்கம் பல்வேறு வர்த்தகர்களுக்கு வரிச் சலுகையளித்துள்ளதால் திறை சேரிக்கு 'வற்' வரி மூலம் கிடைக்கும் தொகை சென்றடையாதுள்ளது" என்றார். முன்னைய அரசின் காலத்திலும் வரிச்சலுகை இருந்திருப்பினும், இவ்வரசு ஊழல் மோசடிகளில் ஈடுபடும் வர்த்தகர்களுக்கே வரிச் சலுகை அளித்துள்ளது என்றார். 'வற்' வரி மூலம் போதிய வருமானம் கிடைக்காததால் பொதுமக்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

உலக வங்கிப் பிரதிநிதி பீற்றர் ஹெரல்ட் ஒரு பில்லியன் டொலர் இலங்கைக்கு வழங்கப்படும் என ஊடகங்கள் மூலம் பிரச்சாரம் செய்தாலும் வழங்கப்பட்டதுவெறும் எண்ணூறு மில்லியன் மட்டுமே என்றார்.

இச்சந்திப்பின்போது மேலும் பல முக்கிய உறுப்பினர்களும் கலந்து கொண்டு உரையாற்றியுள்ளனர்.

---

# படையினரின் சோதனைச் சாவடியில் இளைஞனின் பணம் மாயம்

**மனித உரிமை அலுவலகத்தில் முறைப்பாடு**

வன்னிப் பெருநிலப்பரப்பிலிருந்து யாழ். சென்ற இளைஞன் ஒருவரிடமிருந்து பணமும் அவரது அடையாள அட்டையும் களவாடப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு முள்ளியவளையைச் சேர்ந்த துரைராசா கமலநாதன் எனப்படும் மேற்படி இளைஞர் தனது நண்பர்களுடன் தொண்டமனாறுப் பகுதிக்குச் சென்று கொண்டிருந்த வேளை படையினர் அவரைச் சோதனை நடவடிக்கையின் பின்னர் பயணம் செய்ய அனுமதித்தனர். பின்பு மீண்டும் அவரை வாகனத்திலிருந்து இறக்கிச் சென்று மறைவான இடத்தில் சோதித்ததாகவும், இந்தச் சமயம் அவரது பையும் சோதனையிடப்பட்டது. இதன்போதே அவரது பையினுள் இருந்த 6000 ரூபா பணமும் அவரது அடையாள அட்டையும் களவாடப்பட்டன. இது குறித்து படை அதிகாரிகளிடம் முறையிட்ட போதும் படை அதிகாரிகள் இதனை மறுத்ததால் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் அவர் முறைப்பாடு செய்துள்ளார்.

(27,33)

---

# இருவர் காணாமல்போயினர் வவுனியாவில் பெற்றோர் முறைப்பாடு!

(வவுனியா)

வவுனியாவைச் சேர்ந்த இருவரைக் காணவில்லை என பெற்றோர் வவுனியா மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

வவுனியா கரப்பன்காட்டைச் சேர்ந்த பரமானந்தன் திவ்வியா (வயது 21) மற்றும் தோணிக்கல் நாக பூசணியம்மன் வீதியைச் சேர்ந்த எஸ். சுஜந்தன் (வயது-16) ஆகிய இருவருமே காணாமல் போயுள்ளனர்.

இதுதொடர்பாக பொலிஸ் மற்றும் பாதுகாப்பு உயர் அதிகாரிகளின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை மனிதவுரிமை ஆணைக் குழுவின்அதிகாரிகள் மேற்கொண்டுவருகின்றனர்.

# விகிதாசார தேர்தல் முறையை மாற்ற அரசாங்கம் தீவிர நடவடிக்கை

## தெரிவுக்குழு அமைக்கவும் முடிவு

(கொழும்பு)

**தற்போதைய விகிதாசார தேர்தல் முறையை மாற்றுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. இது தொடர்பாக பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிப்பதற்கும் அதன் தலைவராக எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தனாவை நியமிப்பதற்கும் அரசு தீர்மானித்துள்ளது.**

இந்த தேர்தல் முறையை மாற்றியமைக்கும் பிரேரணையை முன்வைத்தவர் தினேஸ் குணவர்தனாவே. இவரது பிரேரணைக்கு அரசு சார்பில் கருஜயசூரியா இணக்கம் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. அதற்கிணங்க குறுகிய அரசியல் அபிலாசைகளைக் கருத்திற் கொள்ளாமல் அனைவரினதும் விருப்பு வெறுப்புக்களை ஆராய்ந்து மேற்படி தேர்தல் முறையில் மாற்றம் கொண்டுவர பிரதமர் முயற்சி எடுத்துள்ளதாக அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், இவ் விகிதாசாரத் தேர்தல் முறையை மாற்றுவதற்கு 95 வீதமான மக்கள் விரும்புவதாகவும் கட்சிகளுக்கிடையில் மட்டுமன்றி கட்சிக்குள்ளும் மோதலை ஏற்படுத்தும் இந்த முறையை மாற்றியமைக்கக் காலம் வந்துவிட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# சிறிலங்கா அன்னாசிப்பழ இறக்குமதி தடை நீக்கம்

(கொழும்பு)

சிறிலங்காவிலிருந்து அன்னாசிப்பழங்களை இறக்குமதி செய்வதற்கு மூன்று வருடங்களாக தடை விதித்திருந்த அவுஸ்திரேலிய அரசு தற்போது அதனை நீக்கியுள்ளது.

இந் நடவடிக்கையை வெளிநாடுகளுக்குப் பழங்களை ஏற்றுமதி செய்வோர் வரவேற்றுள்ளனர். சிறிலங்காவிலிருந்து அன்னாசிப் பழங்களை இறக்குமதி செய்வதன் மூலம் நோய்க்கிருமிகள் அவுஸ்திரேலியாவினுள் புகுந்துவிடும் என்ற அச்சத்தினாலேயே அந்நாட்டு அரசு அன்னாசிப்பழ இறக்குமதிக்கு தடை விதித்திருந்தது.

தற்போது இரண்டு நிபந்தனைகளின் அடிப்படையில் அன்னாசிப் பழங்களை ஏற்றுமதி செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதாவது சிறிலங்கா விவசாய அமைச்சுடன் ஏற்றுமதியாளர்கள் தங்களைப் பதிவு செய்து கொள்வது,மற்றும் அன்னாசிப் பழங்களுக்கு புகையூட்டவேண்டும் எனும் நிபந்தனைகளாம்.

# மாவட்டத்தில் முதலிடம்

முல்லை மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற தமிழ்மொழி கலைத்திறன் போட்டியில் நட்டாங்கண்டல் அ.த.க. பாடசாலை வில்லுப்பாட்டில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

முதலாம் பிரிவில் பாவோதலில் மூன்றாம் இடத்தையும் மேற்படி பாடசாலை பெற்றுக் கொண்டது.


# கால் நடை வளர்ப்போருக்கான ஓர் நற்செய்தி....

**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் கால் நடை உற்பத்தித் திணைக்களமும் இணைந்து எதிர்வரும் 23.07.2003 முதல் 19.08.2003 வரையான காலப்பகுதிகளில் இடம்பெயர்வு சேவையினை நடத்த உள்ளன.**

**இச் சேவையில் :-**

- கால் நடைகளுக்கான தடுப்பூசி ஏற்றல்
- காளைகளுக்கு நலம் அடித்தல்
- செயற்கை முறைச்சினைப்படுத்தல் சேவை
- பயிற்சிகள்
- கால்நடை சினைப்படுத்தப்பட்டதை உறுதிப்படுத்தல்.

**இடம் பெயர்சேவையில் உங்களது பிரதேசங்களில் மேற்கொள்ளப்படவுள்ளன. எனவே கால்நடைகள் வைத்திருப்போர் மேலதிக விபரங்களுக்கு கால் நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்துடன் அல்லது த.பொ. மே. நிறுவன மாவட்ட, பிரதேச அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.**

(சி-8433)


# முதலாம் ஆண்டின் நினைவினில்



**தேசியதுணைப்படையின் முதல் வித்து**

# லெப். தர்மாம்பாள்

(செல்லையா - தர்மாம்பாள்)

| தாய் மடியில் முத்தாக | மண்மடியில் வித்தாக |
| --- | --- |
| 1980 - 06 - 17 | 2002 - 07 - 21 |

முதலான மாலதி தொடரான சோதியா வழிவந்த
தேசியதுணைப்படையணியின் முதல் வித்தே - உன்
விழி சொன்ன சேதியிலே விடுதலையின்
கனமிருக்கு சுதந்திரத்தின் சுகமிருக்கு
நீ பதித்த கால் தடத்தில் விழுதுகள்
நாம் கால் பதிப்பதனால் விடுதலையும்
தூரமில்லை.

**தமிழீழ தேசிய துணைப்படை,**
**மகளிரணி.**

(3557)

### சிந்தனைக்கு



விடுதலை வேண்டிநிற்கும் ஒரு தேசிய சமுதாயத்தின் உறுதிப்பாட்டை எந்த வொரு சக்தியாலும் அழித்துவிட முடியாது.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 21-07-2003

## அரசின் அக்கறை?

யாழ். குடாநாட்டில் உயர்பாதுகாப்பு வலயத்தின் அளவு அதிகரித்து வருவதாக மனித நேய அமைப்புக்கள் வெளியிட்டுள்ள கவலையானது, சமாதான முயற்சிகளில் காணப்படக்கூடிய முன்னேற்றங்கள் குறித்துக் கேள்வி எழுப்புவதாகவே அமையக்கூடியவையாகும்.

விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஒரு கட்டத்திற்கு அப்பால் முன்னேற்றம் காணமுடியாமல் போனமைக்கும், சமாதானப் பேச்சுவார்த்தையின் எதிர்காலம் குறித்து அவ நம்பிக்கை தோற்றம் பெறுவதற்கும் உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான விடயமே அடிப்படைக் காரணமாக இருந்தது.

இவ் உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான பிரச்சினையில் சிறிலங்கா அரசாங்கமும் சரி, இராணுவமும் சரி உடன்பாட்டிற்கு இசைவான போக்கைக் கடைப்பிடிக்கவில்லை என்பது வெளிப்படையானது எடுத்துக்காட்டாக, யுத்த நிறுத்த உடன்பாட்டின் அடிப்படை நோக்கங்களில் ஒன்றாகிய இயல்பு வாழ்க்கையைத் தோற்றுவித்தல் என்பதில் அரசாங்கமும் சரி, இராணுவமும் சரி முனைப்புடன் செயலாற்றவில்லை என்பது மட்டுமல்ல, முட்டுக்கட்டையைத் தோற்றுவித்தல் என்ற ரீதியிலேயே செயற்பட்டு வந்தன.

மக்களின் வாழ்விடங்களில் இருந்து ஆயுதப் படையினர் வெளியேறி மக்களை மீளக் குடியேற அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கை பாதுகாப்பு உபகுழுவில் முன்வைக்கப்பட்டபோது இராணுவமோ மக்களின் மனிதாபிமானப் பிரச்சினையை இராணுவ ரீதியிலேயே அணுக முனைந்தது. விடுதலைப்புலிகளின் கனரக ஆயுதங்கள் சர்வதேசக் கண்காணிப்புக் குழுவினரின் மேற்பார்வையில் வைக்கப்பட வேண்டும், ஆயுதங்களைப் புலிகள் கையளிக்க வேண்டும் என்பவை போன்ற நிபந்தனைகளை முன்வைத்தது.

அரசாங்கத்தரப்போ, இந்திய இராணுவ அதிகாரியின் ஆலோசனையைக் கோரியது. அரசாங்கத்தின் இந்நடவடிக்கையானது, இவ்விடயத்தில் முன்னேற்றம் காண உதவப்போவதில்லை என்பது தெரிந்தவொன்றாகவே இருந்தது. ஆனால், அரசாங்கமோ அதனைப் பொருட்படுத்தியதாக இல்லை.

இந்த வகையில், சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றத்திற்கு இடையூறாக உள்ள உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான விவகாரத்தைத் தற்பொழுதுகூட அரசாங்கமும், இராணுவமும் மறுபரிசீலனைக்குக் கொள்ளவோ, இந்நெருக்கடிக்குத் தீர்வுகாணவோ முற்படவில்லை என்பதையே அவற்றின் தற்போதைய நடவடிக்கைகளும் வெளிப்படுத்துபவையாகவுள்ளன.

அதிலும் குறிப்பாக, பேச்சுவார்த்தைகள் ஒரு ஸ்தம்பிதமான நிலையை அடைந்து, அடுத்த கட்டப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் குறித்துத் தீவிரமாகப் பேசப்படுகின்ற வேளையிலும், சமாதான முயற்சிகளில் முன்னர் ஏற்பட்ட முட்டுக்கட்டைகளைப் போக்குவதற்கு எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை. அக்கறை காட்டவும் இல்லை.

மாறாக, கிடைக்கப்பெறும் தகவலடிப்படையில், கள நிலையில் மாற்றம் எதுவும் நிகழாதபோதும் இன்னும் தன்னைப்பலப்படுத்திக் கொள்வதில் ஆயுதப்படைத்தரப்பு முனைப்பாக இருப்பதோடு, முன்னைய நெருக்கடிகளை மேலும் வலுப்படுத்த முனைவதாகவே உள்ளது.

இந்தரீதியில், இராணுவம் பாதுகாப்பு வலயங்களை விஸ்தரித்து வரும் அதேவேளை, அரசாங்கமோ பல நவீனரக ஆயுத தளபாடங்களைக் கொள்வனவு செய்வதில் அக்கறை காட்டிவருகின்றது. அதாவது, ஒரு புறத்தில், இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்த வரைவு ஒன்றை புலிகளிடம் அரசாங்கம் கொடுத்துள்ளபோதும்-புலிகள் அதனை ஏற்றுக் கொள்வார்களா? இல்லையா? என்பது வேறு விடயம் - அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைகளுக்குரியதான சூழ்நிலையை உருவாக்குவதில் அரசாங்கம் அக்கறையுடன் செயற்படுவதாகத் தெரியவில்லை.

ஆகையினால், தற்பொழுது மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் அதாவது, அடுத்த கட்டப் பேச்சுக்களை ஆரம்பிப்பது என்பது தொடர்பான விடயத்தில் அரசாங்கம் எந்தளவிற்கு இதய சுத்தியுடன் செயற்படுகிறது என்பது குறித்து கேள்வியே எழுகின்றது. அது மட்டுமல்ல, புரிந்துணர்வு உடன்பாட்டை அமுலாக்கத்திலேயே திருப்திகரமாக மேற்கொள்ளாத அரசாங்கம் இடைக்கால நிர்வாகம் போன்ற விடயத்தில் உணர்வு பூர்வமாகச் செயற்படும் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

## கூட்டணியின் பதவிகள் பற்றிப் பேசவில்லை ஆட்சியமைக்கும் வரை பேச்சுத் தொடரும்!

### - சுதந்திரக் கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பி.யினருக்கும் இடையில் ஏற்படுத்தப்படவிருக்கும் கூட்டணியில் வழங்கப்படவுள்ள பதவிகள் பற்றிய பேச்சுக்கள் இதுவரை நடைபெறவில்லை எனவும் கூட்டணி அமைத்து ஆட்சியமைக்கும் வரை தொடர்ந்து பேச்சுக்கள் நடைபெறும் என்றும் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

கடந்த 17ஆம் திகதி நடைபெற்ற "கூட்டணி" தொடர்பாக சந்திரிகா தலைமையில் நடந்த கூட்டத்தில் பத்திரிகையாளர் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போது அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது.

பேச்சுக்கள் சுமுகமாகவே நடைபெறுவதாகக் கூறிய அவர் பேசப்பட்ட விடயங்கள் எவை என்பது பற்றி கூறுவதை தவிர்த்துவிட்டார். மேலும் அவர் ... பிரச்சினை தொடர்பாக ஜே.வி.பி.யினர் உடன்பாட்டுக்கு வந்திருப்பதாகவும் இது சுதந்திரக் கட்சியும் தொடர்பாக அரசு செய்தி வெளியிட்ட படியால் அவை பற்றி ஒன்றும் கூறமுடியாதுள்ளதாகவும் கூறியுள்ளார்.

## புலிகளின் தலைமைப்பீடத்தின்போக்கை பிரதமர் ரணிலால் மாற்றமுடிந்துள்ளதாம்

### அமைச்சர் காமினிஜெயவிக்கிரம பெரேரா கூறுகிறார்

தீவிரவாத விடுதலைப்புலிகளின் தலைமைப் பீடப் போக்கை பிரதம மந்திரியினால் மாற்ற முடிந்துள்ளது. என்று அமைச்சர் காமினி ஜெய விக்கிரம பெரேரா தெரிவித்துள்ளார்.

முன்பு அச்சுறுத்தலுக்கான கிராமங்களில் இப்பொழுது மக்களும் ஆயுதப் படைகளும் எதுவித உயிரிழப்போ அச்சமோ இன்றி வாழக் கூடியதாகவுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சமாதான நடைமுறைகள், மற்றும் தற்போதைய அரசியல் நடைமுறை குறித்து மக்களுக்கு விளக்கும் பொருட்டு பொலநறுவையில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் பேசும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியினர் வீடு வீடாகச் சென்று நிலவரங்களை விளக்கி வருகின்றார்கள் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க இந்தப் பிரச்சார இயக்கத்துக்குத் தலைமைதாங்கி மாவட்டங்களின் பல இடங்களுக்கும் சென்று இப் பிரச்சார நடவடிக்கையைச் செயற்படுத்தி வருகிறார்.

பிந்துலாகொலவில் இடம் பெற்ற இத்தகைய கலந்துரையாடலில் அமைச்சர்கள் லக்மின் செனவிரத்தின, பந்துல குணவர்த்தன ஆகியோர்கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்கள். வெலிக்கந்தப் பகுதியிலும் இத்தகைய கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது. இதன்போது மக்கள் தமது பிரச்சினைகளை பிரதம மந்திரியிடம் எடுத்துரைத்தனர். இந்தப் பிரச்சார நடவடிக்கை இன்று திங்கட்கிழமை வரையும் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## நாட்டின் 'அரசியல் பிரச்சினைகள்' குறித்து சிஹல உறுமய வீடுவீடாகப் பிரச்சாரம்

(கொழும்பு)

சிறிலங்கா அரசியலில் தற்போது தோன்றியுள்ள பிரச்சினைகள் தொடர்பாக சிங்கள மக்களிடையே எடுத்துக்கூற சிஹல உறுமய நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பான நடவடிக்கை அக்கட்சியால் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. தீவடங்கிலும் உள்ள மக்களுக்கு நாட்டின் நடப்புப் பற்றி விளக்கும் திட்டத்தின் கீழ் முதற் கட்டமாக நுவரெலியா மாவட்டத்தில் வீடு வீடாகச் சென்று பிரச்சாரம் செய்யவுள்ளதாக சிஹல உறுமய கட்சியின்செயலர்தெரிவித்துள்ளார்.

மேற்படி வேலைத்திட்டம் கட்சித் தலைவர் திலக் கருணாரட்ன, நெவில் கருணாரத்ன, தேசிய அமைப்பாளர் சம்பிக்க ரணவக்க, பிரச்சார செயலர் உதய கமன்பில ஆகியோர் பங்கேற்கின்றனர்.

## போரினால் பாதிப்புற்ற சிறுவர்களுக்கான மறுவாழ்வு நிலையம் மூதூரில் அமைப்பு

(திருமலை)

போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு தொழிற்பயிற்சி மற்றும் ஏனைய வசதிகளும் வழங்குவதற்கான ஏற்பாடுகளை யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொண்டுள்ளது.

மூதூர் கிழக்குப் பிரதேசத்தில் இதற்கான பாரிய கட்டடத் தொகுதி யொன்று அமைக்கப்படவுள்ளது. அதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த வெள்ளியன்று இடம் பெற்றது.

யுனிசெவ் நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி கிறிஸ்ரீனா, திருகோணமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக், புனர் வாழ்வுக்கழகத்தின் திருகோணமலை மாவட்ட பணிப்பாளர்களான மாதவ ராஜா, குமரகுருபரன் ஆகியோர் இதற்கான அடிக்கல்லை நாட்டியுள்ளனர்.

இதில் புனர்வாழ்வுக் கழகத்தின் கொழும்புக்கான பொறுப்பாளர் சந்துரு, புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் றெஜி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## சட்டவிரோதக் கட்டடங்கள் அனைத்தும் அகற்ற முடிவு!

(கொழும்பு)

சட்டவிரோதமாகக் கட்டப்பட்டிருக்கும் கட்டடங்கள் யாவும் அகற்றப்படும் என வீடமைப்பு நிர்மாணத் துறைஅமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் அறிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், அரசுக்கு சொந்தமான காணி களில் சட்ட விரோதமாகக் கட்டப்பட்டிருக்கும் கட்டடங்களை அகற்றுவதற்கு 7 நாட்கள் அவகாசம் அதில் குடியிருப்போர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் இக்காலப் பகுதியில் கட்டடங்களில் இருந்து வெளியேறாவிட்டால் அவைகள் யாவும் உடைத்து அகற்றப்படும். இது சம்பந்தமாக இம் மாதம் 16ஆம் திகதி பாராளுமன்றத் தில் சட்டம் நிறைவேற்றப்பட்டு சபா நாயகரினால் கையொப்பம் இடப் பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் கீழ் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இந்த குடியேற்றவாசிகள் குறித்து அதே முறைப்பாடுகள் தமது அமைச்சுக்கு கிடைத்துள்ளது எனவும் இத்தீர்மானத்தை முழுமையாக அமுல் படுத்தப் போகிறேன் எனவும் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் கூறியுள்ளார்.

## 2004இல் 5 போட்டிகளில் அவுஸ்திரேலியா பங்கு பற்றும்

சிறிலங்கா கிரிக்கெட் அணி அவுஸ்திரேலிய அணியுடன் ஐந்து டெஸ்ட் போட்டிகளில் பங்கு பற்றவுள்ளது. அவற்றுள் மூன்று போட்டிகள் சிறிலங்காவிலும் இரு போட்டிகள் அவுஸ்திரேலியாவிலும் நடைபெறவுள்ளன. வரும் மார்ச் மாதம் அவுஸ்திரேலிய அணி சிறிலங்காவில் சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளவுள்ளது. அது மூன்று டெஸ்ட் போட்டி களிலும் மூன்று ஒரு நாள் போட்டிகளிலும் விளையாடும். இது தொடர்பாகப் பேச்சுக்கள் நடைபெறும் என சிறிலங்காவின் கிரிக்கெட் சபைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதைவிட அடுத்த ஆண்டு யூலை மாதம் சிறிலங்கா கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியா விஜயம் செய்து இரு டெஸ்ட் போட்டிகளிலும் பங்கு பற்றும். இதன் போது ஒரு நாள் போட்டிகள் நடைபெற மாட்டாது.




## கிரிக்கெட் பயிற்றுனர் ஆடுகளங்களுக்கு விஜயம்

சிறிலங்காவுக்கான புதிய கிரிக்கெட் பயிற்றுனர் ஜோன் டைசன் கண்டிக்கு விஜயம் மேற்கொண்ட போது இங்கிலாந்து, சிறிலங்கா அணியின் மூன்றாவது டெஸ்ட் போட்டி நடைபெறவுள்ள அஸ்கிரிய மைதானத்தின் ஆடுகளத்தைச் சென்று பார்வையிட்டுள்ளார்.

அப்போது அவர் தெரிவித்ததாவது, கொழும்புக்கு வெளியே இந்த மைதானம் அமைந்திருப்பினும் தாம் எதிர்பார்த்ததைவிட பாரிய திறன் கொண்ட மைதானமாக இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

மேலும் இங்கிலாந்து அணியுடனான முதல் ஒரு நாள் போட்டி நடைபெறவிருக்கும் தம்புள்ள "ரங்கிரி" மைதானத்தையும் அவர் சென்று பார்த்தார்.

அணியின் திறமையைப் பொறுத்ததே வெற்றி தோல்வி. மைதானத்தைப் பற்றி ஒன்றும் கூற முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

ஜோன் டைசன் எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி முதல் சிறிலங்காவுக்கான கிரிக்கெட் பயிற்றுனராக பதவியேற்கவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# பலாலி ஓடுபாதையைத் திருத்த சிறிலங்கா இந்தியாவிடம் உதவி கோரல்

(கொழும்பு)

பலாலி விமானப் படைத் தளத்தின் ஓடுபாதையைத் திருத்துவதற்குச் சிறிலங்கா அரசு இந்தியாவிடம் உதவி கோரியுள்ளது.

சிறிலங்கா அரசின் இந்தக் கோரிக்கை குறித்து இந்திய அமைச்சரவை இதுவரை எந்த முடிவுகளையும் எடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

40 ஆயிரம் படையினரைக் கொண்டிருக்கும் யாழ் குடாநாட்டில் படையினரது போக்குவரத்து மற்றும் தேவைகளுக்காகக் கடல் மார்க்கங்களைப் பயன்படுத்துவதைப் படையினர் விரும்பவில்லை எனப் படைத்துறை வட்டாரங்களுடன் தொடர்புடைய செய்திகள் கூறுகின்றன.

இந்த நிலையில் பலாலி விமானப் படைத் தளத்தின் ஓடுபாதையைப் புனரமைப்பதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

### - புலிகளின் கப்பல் மூழ்கடிப்பு -

# கண்காணிப்புக்குழுவின் இறுதி அறிக்கை கிடைத்த பின்பே நடவடிக்கையாம்


விடுதலைப் புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான அடுத்த நடவடிக்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் இறுதி அறிக்கை கிடைத்தபின் மேற்கொள்ளப்படும் என சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சிறிலங்கா சனாதிபதி, பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரின் அறிக்கைகள் குறித்தும் அவர் விமர்சனங்களை முன்வைத்தார்.

கப்பல் மூழ்கடிக்கப்பட்ட விடயம் சம்பவம் நடந்த பிறகே பாதுகாப்பு அமைச்சருக்கு அறிவிக்கப்பட்டமையையும் அவர் சுட்டிக்காட்டினார்.

# ஒரு இனிங்ஸ் 132 ஓட்டங்களால் அவுஸ்திரேலியா வெற்றி

அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற, பங்களாதேஷ் அணிக்கெதிரான முதல் கிரிக்கெட் டெஸ்டில் அவுஸ்திரேலியா 01 இனிங்ஸ் 132 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.



அவுஸ்திரேலியா முதல் இன்னிங்ஸ் 07 விக்கெட் இழப்பிற்கு 408 ஓட்டங்களையும் பங்களாதேஷ் முதல் இன்னிங்ஸில் 97 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 178 ஓட்டங்களையும் பெற்றது. அவுஸ்திரேலியாவின் சுழல் பந்துவீச்சாளர் ஸ்ருவட் 65 ஓட்டங்களுக்கு 05 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதில் டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் மற்றைய அனைத்து நாடுகளுக்கும் எதிராக சதம் எடுத்து இரண்டாவது ஆட்டக்காரர் என்ற பெருமையை அவுஸ்திரேலியாவின் ஸ்ரீவ்வோ பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மோட்டார் சைக்கிள் சாகச நிகழ்வு பார்த்த 38 பேர் காயம்

மோட்டார் சைக்கிள் சாகச நிகழ்வு ஒன்றைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த 38 பேர் காயமடைந்துள்ளார்கள். இதில் ஆறு பேர் படுகாயமடைந்துள்ளார்கள்.

தென்னிலங்கையில் பிற்றிக்கல என்ற இடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தச் சாகச நிகழ்வினை 50 பேர் மட்டுமே பார்வையிட்டுக் கொண்டிருந்தார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சாகசம் காட்டிய மோட்டார் சைக்கிளோட்டி கட்டுப்பாட்டை இழந்து இவர்கள் மீது மோதியுள்ளார்.

# கொழும்பில் தனியார் பேருந்தினுள் பெண் மீது பாலியல் பலாத்காரம்

(கொழும்பு)

கதிர்காமத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் புறக் கோட்டை தனியார் பேருந்து நிலையத்தில் தனியார் பேருந்து ஒன்றினுள் வைத்துப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் கடமையாற்றும் இப்பெண் கதிர்காமம் செல்வதற்குப் பேருந்து நிலையம் சென்ற போது இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பேருந்தின் நடத்துனர், சாரதி உட்பட ஆறு பேர் இவ்வன்முறையில் ஈடுபட்டதாக அவர் பொலிஸ் நிலையத்தில் தெரிவித்துள்ளார்.

### - முன்பள்ளி அலுவலர்களுக்கான -

# முகாமைத்துவ வலுவூட்டல் பாடத்திட்டம் வகுத்தல்

(அலுவலகசெய்தியாளர்)

போரூட், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இணைந்து நடாத்தவுள்ள வடக்கு கிழக்கில் உள்ள முன்பள்ளி இணைப்பாளர்கள், முன்பள்ளி மேற்பார்வையாளர்களுக்கான முகாமைத்துவ வலுவூட்டல் பயிற்சி நெறியின் பாடத்திட்டத்தை வகுத்தலுக்கான வடக்கு மாகாண வேலைப்பட்டறை இன்று காலை 9.30 மணிமுதல் மாலை 2.00 மணிவரையும் கிளிநொச்சி சிரான் செயலகத்தில் நடைபெறவுள்ளது. இவ்வேலைப் பட்டறையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மாவட்டங்களில் கல்வித் திணைக்களங்கள் சார் முன்பள்ளி ஆரம்பப்பிரிவு உதவிப்பணிப்பாளர்கள், முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய இணைப்பாளர்கள், உள்ளூர் அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகள், பெற்றோர், ஆசிரியர் சங்க உறுப்பினர்கள், போரூட் நிறுவன பிரதிநிதிகள், தமிழர்புனர்வாழ்வுக்கழக பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இவ் வேலைப்பட்டறை ஒழுங்கினை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம் ஒழுங்குபடுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(லோ)

# படையினரின் அனுமதியில்லை

வாழைச்சேனையிலிருந்து மட்டக்களப்பு வரையிலான ரயில் சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான அனுமதியை சிறிலங்காப் படையினர் இதுவரை வழங்கவில்லை என ரயில்வே பொது முகாமையாளர் தெரிவிக்கின்றார். மீண்டும் ரயில் சேவையினை ஆரம்பிக்கக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவும் இந்த ரயில் சேவை இல்லாததன் காரணமாக பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் அவர் தெரிவித்தார். இதேவேளை திருமலையிலிருந்து மட்டக்களப்பிற்கு இட மாற்றம் செய்யப்பட்ட ரயில்வே ஊழியர்களை மீண்டும் திருகோணமலைக்கு மாற்றுவது தொடர்பாக திணைக்களம் கவனம் செலுத்திவருவதாக ரயில்வே பொதுமுகாமையாளர் குறிப்பிட்டார்.

### வியட்நாம்..

வியட்நாமிற்கு றப்பர் உட்பட ஏனைய உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்வது தொடர்பான வடயங்கள் இந்த விஜயத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

### இறையாண்மை...

சுற்றுலாத்துறை, வளிமண்டலவியல், ஆராய்ச்சி, சமுத்திர ஆய்வுகள் போன்ற துறைகளில் அனைத்து நாடுகளும் ஒவ்வொரு நாடுகளில் தங்கியிருக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

### உழவு....

மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

மேற்படி விபத்துத் தொடர்பாக காவல்துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்

(லோ)

### வீதியின்....

துக்கள் அதிகரித்து வருகின்றது. வீதியின் பெரும் பகுதியை இக்காவலரண் ஆக்கிரமித்துள்ள நால் வாகன நெருக்கடி வேளையில் பாரிய விளைவை ஏற்படுத்தும் இக்காவலரண்கள் அகற்றப்படாமையால் மக்களும் பாரஊர்தி வாகனச் சாரதிகளும் மிகவும் விசனமடைந்துள்ளார்கள். (33)

### -போராளி தூயவனின்-

# "இன்னொரு போர்முகம்" நேற்று அறிமுகம்

(அலுவலக செய்தியாளர்)

மருத்துவப் போராளி தூயவனின் 'இன்னொரு போர்முகம்' நூல் அறிமுகவிழா நேற்று மாலை 4.15 மணிக்கு கிளிநொச்சி தூயவன் அரசறிவியல் கல்லூரியில் சிறப்பாக நடைபெற்றுள்ளது. இந்நிகழ்விற்குக் கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தலைமை தாங்கினார்.



இன்னொரு போர்முகம் நூலில் சிறப்புப் பிரதியை சிறப்புத்தளபதி நகுலனிடமிருந்து கரும்புலி தனாவின் சகோதரி பெறுவதனையும் நூலாசிரியர் தூயவன் பதிலுரையாற்றுவதையும் மேலுள்ள படங்களில் காணலாம்

யூலை-05ம் திகதி தமிழீழப் பகுதிகள் எங்கும் சிறப்பாக நடைபெற்ற கரும்புலிகள் எழுச்சி நாள் நிகழ்வில் சமநேரத்தில் வெளியிடப்பட்ட மேற்படி நூல் திருகோணமலை சீனன்குடா, விமானப்படைத் தளத்தின் மீதான தீரம் மிகு தாக்குதல் தொடர்பானதாகும். இதற்கான அறிமுக விழாவே நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் பொதுச் சுடரினைத் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளா பொன்.தியாகம் ஏற்றிவைத்தார். வரவேற்புரையினை கதிர்மகன் நிகழ்த்தியதை அடுத்துச் சிறப்புரையை விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் நிகழ்த்தினார். தூயவனின் நூலிற்கான அறிமுக உரையை 'வெளிச்சம்' சஞ்சிகை ஆசிரியர் கருணாகரன் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து சாள்ஸ் அன்ரனிசிறப்புப் படையணி சிறப்புத்தளபதி நகுலன் கரும்புலி தனாவின் சகோதரியான அனுசியா தேவியிடம் சிறப்புப் பிரதியொன்றைக் கையளித்தார். அதனைத் தொடர்ந்து நூலிற்கான மதிப்பீட்டுரையை எழுத்தாளர் நிலாந்தன் நிகழ்த்தினார்.

மேற்படி நிகழ்வில் எழுத்தாளர்கள், கலைத்துறை சார்ந்தவர்கள், பொறுப்பாளர்கள், போராளிகள், மக்கள் எனப் பெருமளவானவர்கள் கலந்து கொண்டனர். (லோ)

# கால்நடை வளர்ப்போருக்கு விசுவமடுவில் கருத்தரங்கு

கால்நடை வளர்ப்பினை மேம்படுத்தும் நோக்கத்துடன் முல்லை மாவட்ட கால்நடை அபிவிருத்தி அலுவலர் க.சூரியகுமாரினால் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முல்லை மாவட்ட செயலகத்தின் அனுசரணையுடன் கருத்தரங்கு நடைபெற்றது.

விசுவமடு கிழக்கு தொட்டியடியில் நடைபெற்ற இந்நிகழ்வில் கால்நடைவளர்ப்போருக்கு நல்லின மற்ற கால்நடைகள் நலமடித்தல் செய்முறைமூலம் காண்பிக்கப்பட்டதுடன் காது வெட்டுதல், குளம்பு வெட்டுதல் ஆகியனவும் செய்முறை மூலம் செய்து காண்பிக்கப்பட்டது.

# தமிழீழ காவல்துறையில் கிழக்குப் பிராந்திய நடுவப்பணியகம்

### - கொக்கட்டிச் சோலையில் திறக்கப்படும்

(மட்டக்களப்பு)

தமிழீழக் காவல்துறையின் கிழக்குப் பிராந்திய நடுவப்பணியகம் விரைவில் கொக்கட்டிச் சோலையில் திறந்து வைக்கப்படவுள்ளதாக காவல்துறையின் மேற்பார்வையாளர் கங்கை அழகன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கரடியனாறு, வாகரை ஆகிய இடங்களில் இரண்டு காவல்துறை பணிமனைகள் மேலும் திறக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு. அம்பாறை மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு காவல் துறையின் சட்ட திட்டங்கள் தொடர்பாக அறிவூட்டும் கலந்துரையாடல் கிராமரீதியாக நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

### காணாமல்...

எந்தவிதமான பலனும் கிடைக்காது என்பதனால் பாராளுமன்றம் முன்பாக உண்ணா விரதப் போராட்டம் நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளதாகவும் அறிவித்தள்ளார். இந்த உண்ணா விரதப் போராட்டத்தில் தமிழ் மக்கள் பிரதிநிதிகளான தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் கலந்து கொண்டு தமக்கு நியாயமான முடிவுகளைப் பெற்றுத்தரவேண்டும் என்றும் அறி வித்துள்ளார்கள். இது தொடர்பான மேலதிக விபரங்கள் மிக விரைவில் அறிவிக்கப்படும் என்றும் அறிவித்துள்ளார். (33)

### மட்டு...

சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இதன்போது பொதுமக்கள் கொண்டு சென்ற பொதிகளும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு மாறாக தற்போது தமிழ் மக்கள் மீது சிறிலங்காப் படையினர் கெடுபிடிகளை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### அமைச்சரவைத்....

தொகுதி அபிவிருத்திக் குழுவை உதாரணமாகச் சுட்டிக் காட்டினார்.

சமாதானம் இன்னும் ஏற்பட்டு விடவில்லை. போர் நிறுத்தம் மட்டுமே ஒன்றரை வருட காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. சமாதானத்தை நிலைபெறச் செய்வது கடினமான போதும் அதனை வெற்றிகரமாக நிறைவேற்று வதற்குத் தாம் அயராது பாடுபடு வதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தச் சமாதான நடவடிக்கைகளில் அனைத்து இன மக்களினதும் பங்களிப்பு எதிர்பார்க்கப்படுவதாகவும் இந்தச் சமாதான நடவடிக்கைகளுக்குக் கொள்கையடிப் படையில் இணக்கம் தெரிவித்த பொதுசன ஐக்கிய முன்னணியினை வரவேற்கச் செய்யத் தாம் உத்தேசித்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், கட்சியின் செயலாளர்செனறட் கம்புநட்டுவ, கட்சியின் தலைவர். உபதலைவர் ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூலை மாதம் 21ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.